மோதுகை மாற்றுநிலையாக்கம் பற்றி இன்றுள்ள அறிவுநிலையினை மதிப்பீடு செய்தல்

கோர்நீலா ரெயிமான்

1. அறிமுகம் 50

2. ஆராய்ச்சியில் மேற்கொள்ள வேண்டியவை / ஆராய்ச்சி வினாக்கள் 51

மோதுகையின் மூலங்களும், இயல்புகளும் 52

மூன்றாம் தரப்பின் பண்புகள் 53

மூன்றாம் தரப்பின் உபாயங்கள் 54

3. மோதுகை முகாமைத்துவத்துக்கான வேறுபட்ட அணுகுமுறைகள் 57

மோதுகையை முடிவுறுத்தல் என்னும் விடயம் 59

மோதுகைத்தீர்வு என்னும் விடயம் 61

மோதுகை மாற்றுநிலையாக்கம் என்னும் விடயம் 63

4. பயன்படுத்தப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் ஆராய்ச்சி முறைகளின் வகிபாகம் 68

5. தற்போது எழுப்பப்படும் வினாக்களும், விடுக்கப்படும் சவால்களும் 75

6. உசாத்துணை நூல்களும், மேலதிக வாசிப்பும். 76

மோதுகை மாற்றுநிலையாக்கம் பற்றி இன்றுள்ள அறிவுநிலையினை மதிப்பீடு செய்தல்

கோர்டுலா ரெயிமான்

1. அறிமுகம்

மோதுகை முகாமைத்துவம் மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கத்துறை முழுவதும் பரவிக்கிடக்கும் எண்ணக்கருசார்ந்த மற்றும் வரைவிலக்கணம்சார்ந்த, துல்லியமற்றதான நிலைகளினூடே சில வழிகாட்டுதல்களை வழங்குவதே பின்வரும் பகுப்பாய்வின் நோக்கமாகும். அதிநவீன முறையாக எது கருதப்படலாம் என்பதற்கான சாத்தியமான, எனவே தற்காலிக உரையாக்கத்தைப் பின்வரும் விபரிப்பு சிறப்பாக முன்மொழிகின்றது. எவ்வாறாயினும் ஆசிரியரின் கருத்துரைகள் பூரணத்துவம் மிக்கவை என்பதைவிடத் தொடர்ந்தும் விடயங்களை சுருக்கமாகச் சுட்டுபவையாகவே உள்ளன.

மோதுகை முகாமைத்துவத் துறையையும், மோதுகை மாற்றுநிலையாக்கத் துறையையும் எவ்வாறு கருத்தியல் ரீதியாகவும் மற்றும் கோட்பாட்டுரீதியாகவும் விரிவாகத் திட்டமிடுவது என்பதே இந்தப் பகுப்பாய்வின் முன்னிற்கும் வினாவாகும். மூன்று சாத்தியமான அணுகுமுறைகளுக்குக் கவனம்செலுத்துவதன்மூலம் மோதுகை முகாமைத்துவத்துறையின் சூழமைவிலே இந்த வினா கலந்துரையாடப்படும்: மோதுகையை முடிவுறுத்தல், மோதுகைத் தீர்வு மற்றும் மோதுகைநிலையாக்கம் (உரு. 1 ஐப் பார்க்கவும்). இப்பணிகுறித்து மேலும் ஆழமாகப் பேசுவதற்குமுன், சில அறிமுகக் குறிப்புகளைத் தெரிவிப்பது அத்தியாவசியமானதாகும். முதலாவதாக, மோதுகை முகாமைத்துவம் உள்ளார்ந்த பல்துறைச்சீலங்களின் தன்மைகளைக் கொண்டிருந்தபோதும், அல்லது சிலவேளைகளில் அவற்றின் காரணத்தினால், அத்துறை முழுவதுமே எண்ணக்கருசார்ந்த மற்றும் வரைவிலக்கணம்சார்ந்த துல்லியமற்ற நிலை காணப்படுகின்றது.

அதிகமான கல்விசார் விடயவிதானங்களில் மோதுகை முகாமைத்துவம், மோதுகைத்தீர்வு மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கம் போன்ற சொற்பதங்கள் பெரும்பாலும் தெளிவற்றமுறையிலும், ஒன்றுக்கொன்று மாற்றீடாகவும் பயன்படுத்தப்படுவதுடன், அனேகமான இடங்களில் ஒரேவிதமான உத்திகளையே குறிப்பவையாகவுமுள்ளன. இதேபோலவே, பல்வேறுவிதமான மூன்றாம் தரப்பு இடையீடுகள் அனைத்தையும் குறிப்பிடுவதற்கும் ‘இணக்குவித்தல்’ என்னும் சொற்பதமே பயன்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின், முழுத்துறையிலுமே ஒருசீரற்ற துறைச்சொற்களே தவிர்க்கப்படாமல் (ரோப்பர்ஸ் 1997, பக்கம் 5) பயன்படுத்தப்படுகின்ற ஒரு நியமமே காணப்படுகின்றது. கூடுதலான செயற்பாட்டாளர்கள் ஈடுபடுகையில் உள்மைய எண்ணக்கருக்களின் வரைவிலக்கணம்சார் துல்லியமற்ற தன்மை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருகின்றது. மோதுகை முகாமைத்துவம் என்னும் சொற்பதம் வருந்தத்தக்கது ஆகும். ஏனெனில் அதிலே “முகாமைத்துவத்தின் தர்க்கப்போக்கினை” விட்டு வெகுதூரம் விலகிச்செல்லக் கூடிய மோதுகை மாற்றுநிலையாக்கம் போன்ற அணுகுமுறைகள் உள்ளடங்கியிருக்கலாம். எவ்வாறாயினும், மேலும் சிறப்பான மாற்றீடொன்று இல்லாத காரணத்தினால் மோதுகை முகாமைத்துவம் என்பதை ஒரு குடைச்சொற்பதமாகப் பயன்படுத்துவதை நான் ஏற்றுக்கொள்வேன். அதேவேளை, அதன் வரைவிலக்கணம் மற்றும் எண்ணக்கரு சார்ந்த சிரமங்களையும், பின்னடைவுகளையும் பற்றி நான் எச்சரிக்கவிரும்புகின்றேன்.

இரண்டாவது, மிகுந்த அங்கீகாரம் பெற்ற கல்விப்புலமையாளர்கள் தமது ஆய்வுகள் மற்றும் உண்மையான மோதுகை முகாமைத்துவ நடைமுறைகளிலிருந்து பெற்றுக்கொண்ட துறைத்தேர்ச்சியை மோதுகை முகாமைத்துவத்துறையினுள் கொண்டுவருகின்றனர். இதன் பெறுபேறாக, அதிகமானவற்றினை இலகுவாக வகைப்படுத்தமுடியாதிருப்பதுடன், அவர்களின் பணியையும் பிரத்தியேகமான ஒரு வகைப்பிரிவில் சேர்க்கமுடியாத நிலை இருந்துவருகின்றது.

மூன்றாவது, பல்வேறு அணுகுமுறைகளின் சிக்கல் தன்மைகள் இருப்பினும்கூட, அதிநவீன மீளாய்வு முறைகளை முயற்சிப்பதற்கோ அல்லது பயன்படுத்தத்தக்க அறிமுகப்பாடநூல்களை வழங்குவதன் மூலம் துறைச்சீலங்களுக்கிடையிலான தன்மைக்கு அழுத்தம் கொடுப்பதற்கோ மோதுகை முகாமைத்துவ ஆராய்ச்சிச்சமூகம் கடந்த முப்பது வருடகாலத்தில் ஆற்றிய பணி அற்பமானது என்றுதான் கூறவேண்டும். (மியால், ரம்ஸபொதாம் மற்றும் வூட்ஹவுஸ் 1999 விதிவிலக்கான சிலராக இருக்கலாம்)“

நான்காவது, தனிப்பட்ட மற்றும் குழு மோதுகை முகாமைத்துவம்பற்றிய ஆராய்ச்சியானது, சனசமூக இணக்குவிப்பு மற்றும் மாற்றுப் பிணக்குத்தீர்வு (ADR) போன்று, சர்வதேச உறவுகளிலுள்ள மோதுகை முகாமைத்துவத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அன்றியும், அதிகமான தற்போதைய வன்முறை மிக்க, நீடித்த மோதுகைகளின் தன்மையை நோக்குகையில், உள்ளக உள்நாட்டு மோதுகை மற்றும் வெளியக சர்வதேச மோதுகைகளிலான மோதுகை முகாமைத்துவத்தை வேறுபடுத்திக்கண்டறிவது மேலும், மேலும் கடினமாகிக்கொண்டே செல்கின்றது. இம்மோதுகைகள் எந்தளவுக்கு பல்வேறு குழுமங்களின் சமூக மற்றும் அரசியல் முறைவழியினைச் சுற்றியதான பாங்கினைக்கொண்டதாகவும், அவர்களின் மொழி, சமயம், குலம், அரசியல் சமூக அடையாளம் மற்றும் கட்டமைப்பு என்பவற்றிலிருந்து அவற்றின் பண்புகளைப் பெற்றுக்கொள்பவையாகவும் உள்ளனவோ அந்த அளவுக்கு அவை நீடித்ததாகவும் உள்ளன. சர்வதேச அரங்கில் காணப்படும் நீடித்த மோதுகைகள்பற்றிய பின்வரும் பகுப்பாய்வானது ஏனைய சமூக மட்டங்களில் இடம்பெறும் குழுமங்களுக்கிடையிலான மோதுகை முகாமைத்துவத்துடன் ஓரளவுக்குப் பொருந்தக்கூடியதாகவிருக்கும்.

பின்வரும் பகுப்பாய்வுக்கு ஒரு பயன்மிக்க கட்டுக்கோப்பினை வழங்குவதற்காக, நான் முதலில் ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரல் மற்றும் ஆராய்ச்சி வினாக்கள் என்பவற்றில் கவனம் செலுத்திவிட்டுப் பின்பு கோட்பாடு மற்றும் ஆராய்ச்சி முறைகளின் பாத்திரம்குறித்து மீளாய்வு செய்யவுள்ளேன்.

2. ஆராய்ச்சியில் மேற்கொள்ள வேண்டியவை/ ஆராய்ச்சி வினாக்கள்

மோதுகை முகாமைத்துவத்தின் பொதுவான பரப்பு, கோட்பாடாகவும், நடைமுறையாகவும், சர்வதேச சட்டம், உளவியல், தத்துவம், சமூக உயிரியல், சர்வதேச உறவுகள், மோதுகை / சமாதான ஆராய்ச்சி, அரசியல் விஞ்ஞானம், பொருளாதாரம் மற்றும் சமூக மானுடவியல் போன்றவை உள்ளடங்கிய பரந்த வகையிலான துறைச்சீலங்களைக் கொண்ட முழுவதும் சிக்கலான, பல் ஒழுங்கு சார் ஆய்வுப்பரப்பு என்பதாகவே நன்கு புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச உறவுகளையும், சமாதான ஆராய்ச்சியையும் எடுத்துக்கொண்டால், அதிலே விஞ்சி மேம்பட்டு நிற்கின்ற, சட்டநிலைத்தகவு வாய்ந்த ஒரு விடயப்பொருள் இல்லை. இத்துறையின் பரந்த நோக்கெல்லை மட்டுமல்லாது, அது தனிநபர்கட்கிடையிலானது முதற்கொண்டு சர்வதேச மட்டங்கள் வரையிலான மோதுகை மற்றும் அதன் முகாமைத்துவத்தை ஒரு பொதுப்படையான சமூக நிகழ்வாகக்கருதி, அதிலே கவனத்தைக் குவிப்பதை வைத்துப்பார்க்கையில் இது பெரிதும் ஆச்சரியம் தரக்கூடிய ஒன்றல்ல.

மோதுகை மூலங்கள், மேதுகையினை் தன்மை, அதேபோல் சிறப்பான மோதுகை முகாமைக்கு உகந்ததான *மூன்றாம் தரப்புப் பண்புகள் மற்றும் உத்திகள்*போன்ற தனிநபர்களுக்கிடையிலான

மோதுகைகள், குழுமங்களுக்கிடையிலான மோதுகைகள் மோதுகைகள் மற்றும் சர்வதேச மோதுகைகள் தொடர்பான சூழமைவு சார்ந்த மற்றும் முறைவழி மாறிகள்மீதான பகுப்பாய்வுபற்றியே கடந்த காலங்களில் பெரிதும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன (உதாரணத்திற்கு, பேர்கோவிச் மற்றும் ரூபின் 1992, ப 1 -29 ஐப் பார்க்கவும்). கடந்த முப்பது வருடகாலமாக இந்த விடயங்கள்தொடர்பாக நடைபெற்ற பிரதான விவாதங்களைச் சுருக்கமாக நோக்குவதன்மூலம் இது தெளிவாகும்.

2.1 மோதுகையின் மூலங்களும், இயல்புகளும்

மோதுகையின் மூலங்கள் மற்றும் மோதுகையின் தன்மைகள்பற்றிய ஆராய்ச்சிகள் அண்மைக்காலம் வரையிலும் பொதுவாக இரண்டு மெய்ப்பொருள் மூல ஆய்வு உட்கூறுகளிலேயே மையம் கொண்டிருந்தன. அவை, *அகவயநிலையான* மற்றும் *புறவயநிலையான* அணுகுமுறைகளாகும். மோதுகைகளுக்கான அகவயவநிலையான அணுகுமுறை இலக்குகளின் உணர்ந்தறியப்பட்ட ஒத்தியல்பின்மை மீதே அடிப்படையில் கவனம் செலுத்துகின்றது. இவற்றின் அத்தியாவசியமான தாற்பாரியங்களில் முதலாவதாக, பல இலக்குகள் கற்பனையில் ஒத்தியல்பில்லாதவையாக உணர்ந்தறியப்பட்டுள்ளன. அதேவேளை ஒரு புறவயக்கண்ணோட்டத்தில் அவற்றினை நோக்கும்போது, அவை முற்றுமுழுவதுமாக ஒத்தியல்புமிக்கதாகக் காணப்படுகின்றன. இவற்றுக்குப் பிழையான தகவல்கள், கலாசாரத்தைத் தவறாகப்புரிந்துகொள்ளுதல், அல்லது மாறாநிலைக்கருத்து, நம்பிக்கையீனம், உளரீதியான அழுத்தங்கள்போன்ற தவறான உணர்வறிவுகள் காரணமாகவிருக்கலாம். இரண்பாவதாக, கட்டமைப்புரீதியான நியாயமற்ற அல்லது அநீதியான உறவுமுறைகள் இனம் காணப்படுவதில்லை. அதேவேளை, இதில் சம்பந்தப்பட்ட ஆகக்குறைந்தது ஒரு தரப்பாவது தாம் ஏனையோரில் தங்கியிருக்கும் நிலை மற்றும் ஏனையவர்களால் சமமின்றி நடத்தப்படுவது போன்றனவற்றை உணர்ந்தறியத் தவறுகின்றனர். இது “மகிழ்ச்சியான அடிமை” என்னும் புலன்நிகழ்வு மூலம் எடுத்துக்காட்டப்படலாம்.

புறவயநிலையாளர் அணுகுமுறையானது மிகச்சரியாக மேற்கூறிய சூழ்நிலையுடனேயே தொடர்புபடுகின்றது. அது சமூகத்தின் சமூக மற்றும் அரசியல் முறைகள் மற்றும் கட்டமைப்புகளிலுள்ள மோதுகையின் மூலங்களைத் தேடுகின்றது. இதிலே காணப்படுகின்ற மிகமுக்கியமான விடயம் மோதுகை சம்பந்தப்பட்ட தரப்பினரின் உணர்வறிதல்களிலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம் என்பதேயாகும். மோதுகை/சமாதான ஆராய்ச்சியாளர் ஸ்கிமிட் வர்க்க மோதுகைக்கான உதாரணத்தினை பின்வருமாறு வழங்குகின்றார்: “இது சமூகத்திலுள்ள வர்க்கங்கள் ஒத்தியல்பற்ற இலக்குகளைக் கொண்டிருப்பதாலும், ஒன்றோடொன்று சண்டைசெய்வதாலும், மேலும் ஒன்று மற்றொன்றை வெறுப்பதாலும் மாத்திரம் ஏற்படும் மோதுகையல்ல, மாறாக இது ஒரு வர்க்கம் வெல்லுவதை மற்றைய வர்க்கம் இழக்கின்ற ஒரு சமூகக்கட்டமைப்பு இருப்பதால் எழும் மோதுகையாகும்.(ர்கிமிட் 1968 ப. 226 பார்க்கவும்).

இவையனைத்தும் இருந்தபோதிலும், முடிவிலே பார்க்கும்போது அகவயநிலைக்கும், புறவயநிலைக்கும் இடையிலான தனிவேறுபாடு பகுப்பாய்வுப்பெறுமதிகுறித்து எதையுமே தெரிவிப்பதில்லை. “புறவயநோக்குடைய அவதானிப்பாளர்” சம்பந்தப்பட்ட தரப்பினரின் எண்ணக்கருத்துகளுக்கு மாற்றாக முறைமையின் கட்டமைப்பு மோதுகைமிக்கது அல்லது வன்முறைமிக்கது என முத்திரைகுத்தும்போது அவர் அகவயமான அர்த்தப்படுத்தலையே அதற்குக்கொடுக்கின்றார். மோதுகையை எது உருவாக்குகின்றது என்பதுபற்றிய அவரின் சொந்த அகவயமான பெறுமானங்கள் மற்றும் அளவுகோல்கள் என்பவையே இதன் அடிப்படைகளாகவுள்ளன. இதற்கமைய, புறவயநோக்காளர் அணுகுமுறை பெறுமானச்சார்புநிலை அற்றதெனக் கருதமுடியாது. ஏனெனில் அது(.....) சூழ்நிலைபற்றிய அகவயநோக்குடைய ஒரு மூன்றாம் தரப்பினரின் இன்னுமொரு மதிப்பீட்டினையே பிரதிபலிக்கின்றதேயன்றி, பங்கேற்போரினுடையதைப் பிரதிபலிக்கவில்லை (மிச்செல் 1991 பக் 221).

நீண்டகால இனத்துவ தேசிய மோதுகைகளின் தற்கால யதார்த்தத்தினைக் கருத்திற்கொள்கையில் அவற்றினை அகவயத் தன்மைகள் (அடையாளங்கள், தேவைகள் நலன்கள் போன்றன) மற்றும் புறவயக் கட்டமைப்பு (வளங்களின் சமமற்ற விநியோகம் போன்றன) என்பவற்றின் கலவைகள் சம்பந்தப்படுகின்ற இயக்கவியல் செயல்முறைகளெனச் சிறப்பாக விளக்கமுடியும். எனவே அகவயநிலையாளர் கட்டுக்கோப்பு அல்லது புறவயநிலையாளர் கட்டுக்கோப்பு ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்றில் பிரத்தியேகமாகத் தங்கியிருப்பது மோதுகையின் நுட்பவேறுபாடுகளை அறிந்துகொள்வதற்கு உதாவது. மோதுகை முகாமைத்துவ நடைமுறையினைநோகும்போது சில மோதுகை முகாமைத்துவ அணுகுமுறைகள் வெளிப்படையாக என்பதைவிட மேலும் உட்கிடையாக அகவயநிலைக்கும், புறவயநிலைக்கும் இடையேயான கோட்பாட்டு இடைவெளியைவிட சிறப்பான முறையிலே நிரப்புதல் கூடுமென்று கூறலாம். இது பல்வேறுவிதமான மோதுகை முகாமைத்துவ உபாயங்களின் சேர்க்கைகளினூடாகவே எட்டப்படுகின்றது. உதாரணமாக, அதிகார இணக்கப்பாடு, மோதுகைத்தீர்வு உத்திகள் போன்ற மோதுகை முடிவுறுத்தல்களைக் கூறலாம். இவை இலகுபடுத்தல் அல்லது உரையாடல் செயலமர்வுகள் என்பனமூலம் எடுத்துக்காட்டப்படுகின்றன. இவ் விணைந்த முறைகளின் தரமும், எண்ணிக்கையும் அவை பயன்படுத்தப்படுகின்ற மோதுகைப் படிநிலையிலேயே பெரிதும் தங்கியுள்ளன.

2.2 மூன்றாம் தரப்பின் பண்புகள்

மோதுகையின் மூலங்கள் மற்றும் அதன் தன்மைபற்றி மீண்டும் மீண்டும் நடத்தப்படும் விவாதங்களுடன் சமகாலத்தில் கோட்பாட்டாளர்களுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் மத்தியில் மூன்றாம் தரப்பினரின் பண்புகள் பற்றிய விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருகின்றன. இது மூன்றாம் தரப்பு இடையீட்டின் விளைவாக எவ்வளவு தூரத்துக்கு பக்கச்சர்பின்மை/நடுநிலைமை உள்ளது என்பதற்குப் பொருந்துவதாகும். மேலும் பக்கச்சார்பின்மை / நடுநிலைமை என்னும் எண்ணம் வெற்றிகரமாக மூன்றாந்தரப்பு இடையீட்டை சாதித்து எவ்வாறு தெளிவுபடுத்துகின்றது என்பதுபற்றிய வினாவில் கல்வியியலாளர்களும் செயற்பாட்டாளர்களும் கடந்த காலங்களிலே சமமாகப் பிளவுபட்டிருந்தனர். இக்கைந்நூலின் வெப் தள வடிவம் குறித்து ரொன் பிஷரின் பங்களிப்பினைப் பர்க்கவும்) அதிகமான உலக நாடுகளின் உள் முரண்பாடுகளின் தன்மையைக் கருத்திற்கொள்கையில், பக்கச்சார்பின்மை மற்றும் பக்கச்சார்பு என்னும் எண்ணப் போக்கிலொன்றை மூன்றாம் தரப்பினரின் பிரத்தியேகமான பண்பாக நோக்காமல், மாறாக அவர்களின் இருமுக உணர்வுப்போக்கு மற்றும் முழுநிறைவாக்கும் தன்மை என்பவற்றில் கவனம் செலுத்துவதே பொருத்தமானதாகும்.

ஒரு புறத்திலே விசேடமாக பிணக்குக்கு ஒரு வெற்றிகரமான தீர்வினை அடைவதற்குத் தேவையான அழுத்தும் ஆற்றல் முன்றாம் தரப்பினரிடம் இல்லாதபோது அவர்களின் *பக்கச்சார்பின்மை* அத்தியாவசியமானதாகக் தோன்றுகின்றது. இதைத் தெளிவாக எடுத்துவிளக்குகின்ற உதாரணமாக குவேக்கர்கள், தனிநபர்கள் கல்விப் புலமையாளர்கள், மற்றும் செயற்பாட்டாளர்களின் முறைசரா இணக்கப்பாட்டு முயற்சிகளைக் குறிப்பிடலாம். மறுபுறத்திலே, இந்த அழுத்த ஆற்றல் இருக்கும் பட்சத்தில் மூன்றாம் தரப்பினரின் பக்கச்சார்பு பிரதானமானது என நிரூபணமாகலாம் (கிளைபோர் 1996, ப .372). இவ்விடயத்தில் அதிகமான மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளிலே மூன்றாம் தரப்பாக வல்லரசான அமெரிக்கா வகித்த பாத்திரம் உடன் நினைவுக்கு வருகின்றது.

மோதுகை முகாமைத்துவத்துக்கான அபிவிருத்தி நடவடிக்கைமுறைகள் நிலையானதாகவும், இறுக்கமானதாகவும் கருதப்படலாகாது. மாறாக, அவை மாறுகின்ற கட:க்கோப்பு நிலைமைகளுக்கு இலகுவில் பிரயோகிக்கப்படக்கூடிய இயக்கவியல் அம்சங்களைக் கொண்டிருத்தல்வேண்டும். இப்பகுப்பாய்வு காட்டுவதைப் போன்று இலகுபடுத்தல் அல்லது இணங்கவைத்தல்போன்ற மோதுகை இடையீடுகளின் பல்வேறுவகைகளை ஒரு புறத்திலும், அதிகார இணக்கப்பாட்டினை மறுபுறத்திலும் வினைத்திறன்மிகு

முறையில் சூழமைவாக்குவது மிக முக்கியமானதாகும். இலகுவாகக் கையாளமுடியாத மற்றும் ஆழமாக வேரூன்றிப்போன மோதுகைகளிலே தடம் II, மற்றும் III செயற்பாட்டாளர்களின் பன்முக மற்றும் பல்லினப்பாங்கான ஈடுபாட்டினைக் கருத்திற் கொள்ளும்போது இது மிகமுக்கியமானதாகவும், சவால் மிக்கதாகவும் மாறுகின்றது. அடுத்த பகுதி இந்த நடவடிக்கைகள்பற்றிக் கவனம்செலுத்தவுள்ளது.

2.3 மூன்றாம் தரப்பின் உபாயங்கள்

தடம் I, தடம் II மேலும் மிக அண்மையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தடம் III (பெட்டி 1இல் வரையப்பட்டுள்ளது) என்னும் சொற்பதங்களின்மூலம் உண்மையிலேயே நாம் எதைக் கருதுகின்றோம்? கடந்த காலத்திலே மோதுகை முடிவுறுத்தல் உத்திகள் என்றரீதியில் சுவடுIன் உள்ளடக்கம் மற்றும் அழுத்தம் அதேபோல் மோதுகைத்தீர்வு உத்திகள் என்றரீதியில் சுவடுIIன் உள்ளடக்கம் மற்றும் அழுத்தம் என்பனவற்றுக்கிடையிலான வித்தியாசங்கள் குறித்துப் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டது. இராஜதந்திர மற்றும் அரசசெயற்பாட்டாளர்களின் உத்தியோகபூர்வ மற்றும் முறைசார் நடவடிக்கைகளுக்காக தடம் I பிரதானமாக ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளை, ஏனைய அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களின் அதிகளவான முறைசாரா மற்றும் உத்தியோகப்பற்றற்ற முயற்சிகளையே சுவடுII பெருமளவில் குறித்தது.

சுவடுIஇன் நடவடிக்கைகளின் வீச்சானது இடையீட்டு இணக்குவிப்புத்திறம், உண்மைகளைக் கண்டறியும் பணி, இலகுபடுத்துதல் பேச்சுவார்தை / இணக்குவித்தல் மற்றும் அமைதிபேணல் போன்ற பலவந்தமற்ற நடவடிக்கைள் முதற்கொண்டு அதிகார இணக்கப்பாடு, தடைகள், சமாதானத்தை நிலைநாட்டல் மற்றும் நடுத்தீர்ப்பு போன்ற மிகுந்த பலவந்த நடவடிக்கைகள்வரை பரவிக்காணப்படுகின்றது. (அமைதிபேணலின் மாறும் தன்மை பற்றிய சிறந்த கலந்துரையாடலுக்கு இந்தப் பாகத்தின் வெப் தளவடிவத்துக்கான ரொன் பிஷரின் கட்டுரையையும், அதேபோல் இப்பாகத்தில ஹன்சன் ரம்ஸ்போதம் மற்றும் வுட்ஹவுஸ் ஆகியோரின் கட்டுரையையும் பார்க்கவும்.)

சுவடுIற்கு மாற்றமாக சுவடுII ஆனது இலகுபடுத்துதல் அல்லது ஆலோசனை என்பவற்றின்மூலம் எடுத்து விளக்கப்படுகின்ற அனைத்து உத்தியோகப்பற்றற்ற மற்றும் பலவந்தமற்ற நடவடிக்கைகளைக் குறித்துரைக்கின்றது (சில சந்தர்ப்பங்களில் இலகுபடுத்தல் அல்லது ஆலோசனை என்கின்ற இரண்டில் ஒன்றைக் குறிக்கின்றதான இணக்கப்படுத்தல் என்னும் மிகப்பொதுவான சொற்பதத்தை ஒருவர் சந்திக்க நேரிடுகின்றது). இவை பொதுவாகப் பிரச்சினைதீர்க்கும் செயலமர்வுகள் அல்லது வட்டமேசைக் கலந்துரையாடல்களின் வடிவத்தில் நடத்தப்படுகின்றன.

தடம் I மற்றும தடம் II இற்கிடையிலான இந்த வேறுபாடுகள் பயன்படுத்தப்படுகின்ற உத்திகளிலும் ஆழமான வேறுபாடுகள் இருக்கும் என்பதை மேலும் எடுத்துரைக்கின்றது. உத்திகள் அழுத்தத்தில் வேறுபடுகின்ற போதிலும், அதிகமான மூன்றாம் தரப்பு இடையீடுகளிலே சுவடுI மற்றும் சுவடுII உத்திகள் ஒன்றுடனொன்று இணைந்து செல்வது தெளிவாகத்தோன்றுகின்றது. பலசந்தர்ப்பங்களில் அவை வேண்டுமென்றே ஒன்று சேர்க்கப்படுகின்றன. நடைமுறையிலே சுவடுI இன் செயற்பாட்டாளர்களின் இணக்குவிப்புப்போன்ற மோதுகையை முடிவுறுத்தல் நடவடிக்கைகள் சுவடுII இன் செயற்பாட்டாளர்களின் இலகுபடுத்தல்கள்/ஆலோசனைகள் போன்ற மோதுகைத்தீர்வு உபாயங்களுடன் உண்மையிலேயே பொருந்தலாம். அதிலே மிகமுக்கியமான விடயம் என்னவென்றால் இரண்டு சுவடுகளினதும் சில அம்சங்கள் ஒன்று மற்றொன்றை முழுநிறைவாக்குவது மட்டுமல்லாது, கோட்பாடு மற்றும் நடைமுறை ஆகிய இரண்டிலும் மேற்கவியவும் செய்கின்றன. இதற்குச் சிறந்த உதாரணமாக 1990 களின் ஆரம்ப காலகட்டத்தில் வட அயர்லாந்தில் நடைபெற்ற மோதுகை முகாமைத்துவ முயற்சிகளைக் குறிப்பிடலாம். வட அயர்லாந்தின் பிரித்தானிய ராஜாங்கச் செயலாளரின் சுவடுI மீதான மோதுகை முடிவுறுத்தல் முயற்சிகள் சமூக உறவுகள் சபையின் தடம் II மோதுகைத் தீர்வுப் பணிகளுடன் எவ்வளவு தூரம் பகுதியொத்திருந்தது என்பதை டேவிட் புளூம்பீல்ட் (1997) விளக்கிக் காட்டியுள்ளார்.

மோதுகை முடிவுறுத்தலானது மோதுகைத்தீர்வுக்கு அத்தியாவசியமான ஒரு முன் - நிபந்தனையெனப் புரிந்துகொள்ளப்படலாகாது. உதாரணமாக, தடம் I இன் மீதான பேச்சவார்த்தைகள் ஒரு முட்டுக்கட்டை நிலைக்கு இட்டுச்சென்றால் இலகுபடுத்தல் மற்றும் பிரச்சினை தீர்க்கும் செயலமர்வுகள் (தடம்II) வடிவிலமைந்த உத்தியோகப்பற்றற்ற மற்றும் முறைசாராச்செயற்பாடுகள் முன்முயற்சிக்கப்படலாம் அல்லது தொடரப்படலாம் என்பதுடன், ஒரு பாரிய முன்னேற்றத்தினை உருவாக்குவதற்கு அவை உதவியாக இருக்கலாம் என்பதை அனுபவங்கள் காட்டியுள்ளன.

இதை எடுத்துவிளக்குவதற்கு நோர்வேயில் இடம்பெற்ற புறமார்க்க மோதுகைத்தீர்வுச் செயன்முறையினைக் குறிப்பிடலாம். அது ஈற்றிலே மோதுகை முடிவுறுத்தலுக்கான ஒரு கட்டுக்கோப்பு உருவாகுவதற்கும், அதைத் தொடர்ந்து 1993ம் ஆண்டில் இஸ்ரேலிய அரசாங்கத்திற்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையிலே ஒரு பேச்சுவார்த்தை உடன்படிக்கை உருவாகுவதற்கும் வழிகோலியது. (லெடராச் 1997 ப32 - 34 கோர்பின் 1994 என்பவற்றைப் பார்க்கவும்).

இச்செயல்முறையிலே ஒரு நோர்வே நாட்டுக் கல்விப்புலமையாளரும், அவரது மனைவியும் 1992 இல் இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீனிய அதிகாரிகளுக்கு இடையிலே இரகசியப்பேச்சுக்களை இலகுபடுத்தி நடத்திவந்தனர். அவர்களில் ஒவவொருவரும் தங்களது சுயாதீனத்தைப் பேணியவாறே உயர்மட்டத்திலே ஒருவர் மற்றவரைச் சந்திக்கக்கூடிய வசதியை அனுபவித்துவந்தனர்.

உண்மையான முறைசார் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்குமுன்பதாக இந்த இரண்டு பகைமை பாராட்டும் தரப்பினருக்கிடையே ஒரு நியாயமான ஒத்துழைப்புமிக்க உறவுமுறையை ஏற்படுத்தியதானது பேச்சுவார்த்தைச் செயன்முறையின் வெற்றிக்குத் தாமே இன்றியமையாதது என்பதைக்காட்டுவதோடு மட்டுமல்லாது, தனிமைப்படுத்திய நிலையில் முயற்சிக்கப்படும் அதிகார இணக்கப்பாடு, பேரம்பேசுதல் போன்ற மோதுகை முடிவுறுத்தல் உபாயங்களின் வரையறுக்கப்பட்ட, உள்ளார்ந்த இயலுமையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இந்தப் பகுப்பாய்வின்பின்னால் மறைந்திருக்கும் உள்ளீடான கருதுகோள் என்னவெனில், தடம் I அல்லது தடம் II கட்டுக்கோப்புகளில் பிரத்தியேகமாகத் தங்கியிருப்பதன்மூலம் மிகச் சொற்பமான மோதுகை முகாமைத்துவ உபாயங்களே பூரண பயனுறுதியுடையவையாகின்றன என்பதேயாகும். 1990களில் இருந்தே இடை - உறவுத்தன்மை மற்றும் கூடடுச்சார்பு பற்றிய ஒரு பகுப்பாய்வுக்கவனம் உருவாகி, அது இன்று இத்துறையின் மத்திய களத்தினை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றது. 1990 களின் மத்தியபகுதியிலே மோதுகை முகாமைக்கு நிறைவாக்கம்செய்யும் ஓர் அணுகுமுறையை வலியுறுத்துகின்ற விடயவிதானங்களில் ஒரு மாற்றத்தைக் காணக்கூடியாதாகவிருந்தது. இவை இணக்குவிப்பு மற்றும் பேச்சுவார்த்தைபோன்ற மோதுகை முடிவுறுத்தல் உத்திகளை வசதிப்படுத்துதல்/ஆலோசனை போன்ற மோதுகைத்தீர்வு உத்திகளுடன் இணைப்பதற்கான தேவைபற்றி மேலும் வலியுறுத்துகின்றன (இவற்றுக்கான சிறந்த உதாரணங்களை கிளாஸில் 1982, பிஷர் மற்றும் கீஷ்லி 1991, பிரெய்ன் 1994 ஆகியோரின் பணிகளில் காணலாம்).

நிறைவாக்கும் மற்றும் ஒன்றிணைக்கும் இந்த முழுமையான அணுகுமுறைகள் சுவடுI மற்றும் தடம் II இன் உத்திகளுக்கிடையிலான இரு பிரிவுகள்மீது கவனம் செலுத்துவது மாத்திரமன்றி, வன்முறைமிகு மோதுகைச் சூழல் மற்றும் சமாதான உருவாக்கல் நடவடிக்கைகளின் பல்வேறு சிக்கல்தன்மைகளுக்குள் திசைமுகப்படுத்தலையும், புதிய நுண்ணறிவுகளையும் வழங்குகின்றன.

மோதுகை முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் உத்திகளைக்கொண்ட பல்வேறுவிதமான செயற்பாட்டாளர்களை உணர்வுமிக்க முறையில் இணைப்பது தீர்மானகரமான, மோதுகையின் தீவிரம் அதிகரிக்கும் போதான அல்லது தீவிரம் குறையும்போதான பல் வேறு கட்டங்களில் எழுகின்ற அரசியல் மற்றும் சமூக முன்னுரிமைகளுடன் உரியமுறையில் பொருந்தவேண்டும்.

ஃபிஷர் மற்றும் கீஷ்லி (1991) ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட மிகவும் பிரபலமானதும், பரவலாகக் கலந்துரையாடப்பட்டதுமான “ஓர் எதிர்பாரா நிகழ்வு மாதிரிக்கு அமைய’ மோதுகையின் தீவிரநிலை எவ்வளவு உச்சத்தை அடைகின்றதோ அதேபோன்று இடையீடும் அதிகமதிகம் வழிகாட்டல்மிக்கதாக இருத்தல்வேண்டும். அப்பொழுதுதான் அது பயன்மிக்கதாக இருக்கும். இந்த மாதிரிகள் இரண்டு தாற்பரியங்களைக் கொண்டுள்ளன. முதலாவது, சில சமாதான உருவாக்க நடவடிக்கைகள் சில கட்டங்களில் ஏனையவற்றைவிடவும் மேலும் முக்கியமானவையாக இருக்கும். மேலும் இரண்டாவது, செயற்படுத்துநர்கள் தமது சமாதான உருவாக்க நடவடிக்கையின் முன்னேற்றத்தை அளவிடும்போது, அவர்களுக்கு மோதுகை முகாமைத்துவ உத்திகளின் முன்னைய கட்டத்துக்குத் திரும்பவேண்டி ஏற்படலாம். பல்வேறு எதிர்பாரா மாதிரிகளை ஆழமாகக் கலந்துரையாடுவதோ அல்லது தரப்புகள் இடையிலான ஓரினத்தன்மையின் பொதுவான எடுகோள்குறித்த விமர்சனங்களை அல்லது மோதுகை விரிவாக்கத்தின் நெகிழ்வற்ற கால ஒழுங்குக் கட்டங்களை மீள்பார்வைசெய்வதோ இக்கட்டுரையின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டதாகும் (ஆழமான விடயங்களுக்கு வெப் கூட்ராக்கோ மற்றும் வோல்ட்டர்ஸ் 1996 பக் 171-184 ஐப் பார்க்கவும்). இந்த முழுநிறைவாக்கும் ஒன்றிணைப்பு அணுகுமுறைகளிலிருந்து எழுப்பப்பட வேண்டிய பிரதான விடயம் என்னவெனில் பல்வேறுவிதமான மாதிரிகளினதும், எண்ணக்கருக்களினதும் தொகுப்பு சிக்கல்மிகுந்த மோதுகை நலன்கள் மற்றும் தேவைகளின் வெளிச்சத்திலே பகுப்பாய்விற்குப் பாரிய பெறுமதியையும், நுண்ணறிவையும் கொண்டுவரமுடியும் என்பதாகும். உண்மையிலேயே சில கல்விப்புலமையாளர்கள்/செயற்பாட்டாளர்கள் மேலதிக தடங்கள் என்னும் எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தியதன்மூலம் முழுநிறைவாக்கும் ஒன்றிணைப்பான அணுகுமுறைகளினை ஒருபடிமேலே எடுத்துச் சென்றுள்ளனர். இது இப்பொழுது பல்தட அனுகுமுறை என்னும் பெயர்மாற்றத்தையும் பெற்றுள்ளது. மிக அண்மையில் ஏற்பட்ட எண்ணக்கருசார்ந்த அபிவிருத்தி தடம் III என்கின்ற மேலதிகத் தனித்துவமான தடத்தின் உருவாக்கமாகும். இது அடிமட்டத்திலான பயிற்சி இயலுமையைக் கட்டியமுப்புதல் மற்றும் வலுவூட்டல், உள அதிர்ச்சிவடுப்பணிகள், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மற்றும் மனிதநேயப் பணிகள் என்பவற்றில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள அனைத்துச் செயல்முறை மற்றும் கட்டமைப்புச் சார்ந்த முன்முயற்சிகளினைக் குறித்துரைக்கின்றது (இந்த அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ள குந்தர் பேச்லரின் கட்டுரை அரச மறுசீராக்கம் போன்ற கட்டமைப்புசார்ந்த முன்முயற்சிகள் பற்றிய, நுண்ணறிவுமிக்க கலந்துரையாடலை வழங்குகின்றது). கடந்தகாலங்களிலே, தடம் I மற்றும தடம் II இற்கு இடையிலான எளிமையான வேறுபாடானது சமாதான உருவாக்க நடவடிக்கைகளின் செழுமையையும், தடம் III க்கே உரித்தான முயற்சிகளையும் போதிய அளவுக்கு உள்வாங்கிக்கொள்ளத்தவறிவிட்டது. இதன் விளைவாக இந்த இரண்டு பிரிவுகளுக்குள்ளும் வராத அனைத்தும் தவிர்க்கப்பட்டன.

பெட்டி 1: தடம் I, II மற்றும் III செயற்பாட்டாளர்களும், அவர்களின் உபாயங்களும்

	தடம் - I	தடம் - II	தடம் - III
ஈடுபட்டுள்ள நடவடிக்கைய-ாளர்கள்	**மோதுகைத் தரப்பினர்களின் இணக்கப் பாட்டாளர்களாக, அத்துடன்/அல்லது பிரதிநிதிகளாக அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்கள்**	தனிப்பட்ட நபர்கள், கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள், சிவில் இணக்கப்பாடு, பிரஜைகள் இராஜதந்திரம் முதல் மோதுகைத் தீர்வில் ஈடுபட்டுள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் வரை	உள்ளூர் அடிமட்ட நிலையிலுள்ள அமைப் புக்கள் முதல் உள்நாட்டு மற்றும் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையங்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் மனிதநேய உதவிவரை
கைக்கொள் ளப்பட்ட உத்திகள்	பெறுபேறுகள் திசைமார்க்கம் கொண்டது: **தடை, நடுத்தீர்ப்பு, அதிகார இணக்கப்பாடு போன்றஉத்தியோகபூர்வ** மற்றும் பலவந்த நடவடிக்கைகள் முதல் இலகுபடுத்துதல், பேச்சுவார்த்தை, இணக்குவிப்பு, உண்மைகளைக் கண்டறியும் பணி மற்றும் செல்வாக்கைப் பயன்படுத்துதல் போன்ற பலவந்தமற்ற நடவடிக்கைகள் வரை	செயல்முறைத் திசை மார்க்கம் கொண்டது **உத்தியோகப் பற்றற்றதும் பலவந்தமற்றதுமான நடவடிக்கைகள், பிரதானமாக இலகுபடுத்துதல் செயலமர்வுகள் மற்றும் வட்டமேசைகள் வடிவிலமைந்த கலந்தாலோசனை.**	செயல்முறை அத்துடன்/ அல்லது கட்டமைப்புத் திசைமார்க்கம் கொண்டது **இயலுமைகளைக் கட்டியெழுப்புதல் மன அதிர்ச்சி வடுப்பணிகள்; அடிமட்டத்திலமைந்த பயிற்சிகள் அபிவிருத்தி மற்றும் மனித உரிமைப் பணிகள்.**

3. மோதுகை முகாமைத்துவத்துக்கான வேறுபட்ட அணுகுமுறைகள்

இப்பகுதியானது மேலேயுள்ள பகுப்பாய்வுப் பின்னணியின் சூழமைவில் மோதுகை முகாமைத்துவத்துக்கான மூன்று வேறுபட்ட, ஆயினும் தொடர்புமிக்க அணுகுமுறைகள்பற்றிய ஒரு பரிசீலனையை வழங்கும். அவை மோதுகை முடிவுறுத்தல், மோதுகைத்தீர்வு மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கம் என்பவையாகும். இந்த மூன்று அணுகுமுறைகளையும் உரியமுறையில் புரிந்துகொள்வதற்கு அவை தனிவேறான, தனிமையான, முழுநிறைவான, கோட்பாட்டுரீதியான முறைகள் என நோக்கப்படலாகாது என்பதை உணர்ந்து கொள்வது முக்கியமானதாகும். பல்துறைச்சீலங்களாலும், பல்லினத்தன்மைகளாலும் பலப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் இந்த மூன்று அணுகுமுறைகளுக்குமான இத்தகைய தனிமைப்படுத்தப்பட்ட முறைமைகளை அடைந்துகொள்ள இயலுமா என்பது சந்தேகத்திற்குரியதே. அவற்றைவிட இந்த அணுகுமுறைகளை வெபரின் சீர்மைவகைகளின் மாற்றுவடிவமென மேலும் சிறந்தமுறையில் விளங்கிக்கொள்ளலாம். பின்வரும் பகுபப்பாய்வுக்கு ஒரு வடிவத்தை வழக்குவதற்காக இந்தப் பகுதியானது பின்வருவனவற்றின் பல்வேறுவிதமான விளக்கங்களில் கவனம் செலுத்தவுள்ளது:

- இதற்குரிய கோட்பாடு
- நீடித்த வன்செயல் மோதுகையின் மூலமும், உள்மைய எண்ணக்கருக்களும்

- மோதுகை
- ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்கள்
- கைக்கொள்ளப்பட்ட உத்திகள்
- வெற்றிகரமான விளைவுக்கான அளவுகோல்களும், சமாதானத்தின் தன்மையும் கோட்பாடுபற்றிய கலந்துரையாடலானது மூன்று அணுகுமுறைகளினதும் இதற்குரிய உட்கிடையான கோட்பாட்டுரீதியிலான கருதுகோள்களை எழுப்புகின்றது. அவை ஒவ்வொன்றும் நீடித்த வன்செயல் மோதுகைகளின் மூலங்களை பகுப்பாய்வுசெய்ய முயற்சிக்கையில், அவை தமது முறைக்கு மோதுகையின் மூலகாரணங்களின் வித்தியாசமான விளக்கங்களையே உருவாக்கும்.

பிரச்சினைமிகுந்த அகவய/புறவயப் பிளவினை ஒருவாறு தவிர்த்துக்கொள்ளுகின்ற இந்த விடயத்திற்கு பகுப்பாய்வுமிகுந்த அணுகுமுறையினைப் பிரேரிப்பதற்கு மூன்று தனிவேறான, ஆனால் ஒன்றையொன்று புறந்தள்ளவேண்டுமென்ற அவசியமில்லாத முரண்பாட்டின் விளக்கங்கள் உதவிபுரியக்கூடியனவாகும்:

- அரசியல் ஒழுங்கின் /நிலவும் நிலையின் ஒரு பிரச்சினையாக;
- சமூகமாற்றத்தின் ஓர் ஊக்கியாக;
- சமூக நீதிக்கான ஓர் அகிம்சைப் போராட்டமாக.

மோதுகையின் இந்த மூன்றுவகையான விளக்கமானது சமூகக்கோட்பாட்டில் வெபர் (1948) டஹ்ரென்டொர்ப் (1957 மற்றும் 1994) கோசர் (1956) மற்றும் சிம்மல் (1955) ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட மோதுகைக் கோட்பாடுகள் பற்றிய ஆழமான ஒப்பீட்டு ஆய்விலிருந்து பெரிதும் உணர்வுபெற்றதாகும்.

இவை பிரதானமாக முக்கிய கோட்பாட்டைச் சுற்றிச்சுழலும் சமூகக்கோட்பாடுபற்றிய சமீபகால விவாதங்களினாலும் மேலும் உணர்வூட்டப்பட்டுள்ளன (உதாரணத்திற்குப் பார்க்க பெதர்ஸ்டோன் மற்றும் பார்க்கின் 1997 பெதர்ஸ்டோன் 2000). அத்தோடு இவை அந்தனி கிடனின் கட்டமைப்பாக்கல் கோட்பாட்டினாலும் உணர்வு பெற்றுள்ளன (உதாரணத்திற்கு ஜாப்ரி 1996 ஐப்பார்க்கவும்). பின்வரும் பகுப்பாய்வானது எடுத்து விளக்குவதுபோன்று, எந்தக் குறிப்பிட்ட விளக்கத்தின் பல்வேறு விதமான மோதுகை முகாமை அணுகுமுறைகள் செயற்படுகின்றன என்பதே மையவினாவாகத் தோன்றுகின்றது.

மோதுகைபற்றிய எவ்வித குறிப்பிட்ட விளக்கமும் மோதுகை முகாமைக் கல்விப்புலமையாளர்களின் சித்தாந்தங்கள் உள்ளிட்ட அவர்களின் சுயவிளக்கங்களின் மீது கட்டாயமாக நேரடியான மற்றும் மறைமுகமான பின்விளைவுகளைக் கொண்டிருக்கும் என்பது இதன் கருதுகோளாகும். மோதுகையை, அடிப்படையில், அரசியல் ஒழுங்கின் ஒரு பிரச்சினையாகப் புரிந்துகொள்வதானது பழைமைவாதமானதாகவும், நிலவும் நிலைசார்ந்ததாகவும், இன்னும் சிறப்பாக நோக்கில் மோதுகை முகாமைத்துவத்துக்கான சிகிச்சை அணுகுமுறையாகவுமே தொடர்ந்தும் இருந்துவருகின்றது. இதற்கு நேரெதிராக, மோதுகையைச் சமூகமாற்றத்துக்கான ஓர் ஊக்கியாக அல்லது சமூகநீதிக்கான ஓர் அகிம்சைப்போராட்டமாக நோக்குகின்ற மோதுகை முகாமைத்துவ அணுகுமுறைகள் மேலும் தீவிரமான நிலைமாற்றம்சார்ந்த அணுகுமுறைகளைத் தம்மகத்தே கொண்டிருக்கின்றன. இது ஓர் அணுகுமுறையானது மற்றயதைவிடக் கட்டாயமானதாக சிறப்பானது எனக்கருதவில்லை. மாறாக, மோதுகை பற்றிய மூன்று விளக்கங்களுக்கும், மோதுகை முகாமைத்துவ முயற்சிகளுக்கான பெறுமதிமிக்க நோக்கங்களை அவற்றுக்கே உரிய சொந்த விதிகளில் நிர்ணயம் செய்கின்றன. எவ்வாறாயினும், நாம் எவ்வடிவிலான மாற்றுநிலையாக்கத்துக்கான நிலைபேறான சமாதான உருவாக்கச்செயல்முறையிலே ஈடுபடவேண்டுமாயின், மூன்று விளக்கங்களும் தளர்வின்றிப் பேணப்படல் வேண்டும் என்றே நான் மேலும் வாதிட விரும்புகின்றேன். உதாரணமாக, செயற்பாடின்றி இருக்கும் தொடர்புகளை அடிப்படையிலே மாற்றக்கூடிய முறைகளைக் கருத்திற்கொள்ளாத, நிலவும் நிலைத் திசைமுகப்பட்ட ஒரு மோதுகை முகாமைத்துவ அணுகுமுறையானது அடக்குமுறைமிக்க, சமத்துவமற்ற

சமூக நிலைகளை மறைமுகமாகப் பேணிவளர்க்கின்ற இடர்வரவுக்கு உள்ளாகின்றது. (பார்க்கவும் கிளெமென்ட்ஸ் 1998, ப. 138).

மறுபுறத்திலே, ஒரு குறித்த சமூகத்தில் தீவிர நிலைமாற்றத்தை முன்னேற்றுவதை நோக்கமாகக்கொண்டதும், அதேநேரத்தில் சமூக ஒழுங்கினையும், அதன் தொடர்ச்சியான நிலையினையும் எவ்வாறு கட்டிக்காப்பது என்பதில் கவனம் செலுத்தாததுமான ஓர் அணுகுமுறையானது அராஜகத்துக்கு இட்டுச்செல்லக்கூடியதாகும்.

செயற்பாட்டாளர்கள் மற்றும் உத்திகள் சம்பந்தமான பெறப்படும் பகுப்பாய்வானது தடம் I, II, மற்றும் III இன் செயற்பாட்டாளர்களுக்கும் அவர்களின் தனிவேறான பண்புகளுக்கும் இடையில் மட்டுமன்றி, ஒரே மாதிரியான உத்திகளுக்கிடையிலும் வேறுபாட்டைக் கண்டறிகின்றது. மேலும் வெற்றிகுறித்த அர்த்தப்படுத்தல்கள் மிகவும் வித்தியாசமான, ஊகிக்கப்பட்ட மதிப்பீட்டு அளவுகோல்களை உட்கிடையாகச் சுட்டுவதுடன் பல்வேறு விதமான மோதுகை முகாமைத்துவ அணுகுமுறைகளை வெற்றிகரமானது என எப்போது நாம் நியாயமானமுறையில் கருதுகின்றோம் என்ற கேள்வியையும் எழுப்புகின்றது. இறுதியில் மூன்று அணுகுமுறைகளினதும் பகுப்பாய்வானது நேரடியான தன்மை குறைந்ததாகவும், மேலும் கடினமான பணியாகவும் மாறிவிடுகின்றது.

இது உட்கிடையாகவும், வெளிப்படையாகவும் இத்துறையிலுள்ள அனேகமான கல்விமான்கள் இப்பிரச்சினைகள் சம்பந்தமாக, பிரத்தியேகமாக அவர்கள் பயன்படுத்தும் உரிய கோட்பாடுகுறித்து கொண்டுள்ள ஊகங்களின் விளைவாக எழுவதாகும்.

3.1 மோதுகையை முடிவுறுத்தல் என்னும் விடயம்

மோதுகையை முடிவுறுத்தல் என்னும் விடயம் காரணங்களுக்குத் தீர்வுகாணாது, மோதுகைகளின் நிலைபேறான இருதரப்பினருக்கும் சாதகமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள அத்துடன்/அல்லது நேரடி வன்முறைக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்கப் பயன்படுத்தப்படும் விளைவுகளின்பால் திசைமுகப்பட்ட அனைத்து உத்திகளையும் குறிக்கலாம். இவ்விடயப்பரப்புத்தொடர்பான ஆராய்ச்சிகளுக்கான உதாரணங்களை வழங்கும் பெர்கோவிச் (1984 மற்றும் 1996). வில்லியம் சார்ட்மன் (1985 மற்றும் 1995) மற்றும் பிஷர்மற்றும் யூரி (1981) ஆகியோரின் பணிகளைப் பேச்சுவார்த்தை தொடர்பான ஹார்வாட் பல்கலைக்கழக நிகழ்ச்சித் திட்டத்திலே காணலாம்.

முகாமைத்துவத்தின் சித்தாந்தத்தை அடிப்படையாகக்கொண்ட மோதுகையை முடிவுறுத்தல் தொடர்பான அதிகமான ஆராய்ச்சிகள் மோதுகையை அரசியல் ஒழுங்கினதும், நிலவும் நிலைமையினதும் ஒரு பிரச்சினையாகவே இலக்கணப்படுத்துகின்றன. இவ்வாறான நீடித்த வன்செயல் மோதுகை இணைவொத்த தன்மையற்ற நலன்கள் அத்துடன்/அல்லது விசேடமாக பிராந்தியங்களுக்கான அரிதான அதிகார வளங்களுக்கான போட்டியின் விளைவுகள், பிரத்தியேகமாக ஆட்புலம் சம்பந்தமான போட்டியின் விளைவு என்றே கருதப்படுகின்றது. உண்மையிலேயே மோதுகை என்பது பூச்சியத்தொகை ஆட்டம் என்பதை இவ்வாறான வரைவிலக்கணம் உட்கிடையாக உணர்த்துகின்ற அதே வேளை, மோதுகை முடிவுறுத்தலானது இதேவிதமான சிந்தனைப்போக்கினை அவசியம் பின்பற்றவேண்டும் என்கின்ற தேவையில்லை. ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களின் குறிப்பிட்ட நலன்கள் மற்றும் மோதுகைத் தீவிரத்தன்மையின் நிலை என்பவற்றுக்கு அமைய மோதுகை முடிவுறுத்தலானது இலகுவாக பூச்சியக் கூட்டுத்தொகை ஆட்டத்தின் எல்லையைக் கடந்து, மாறாக பூச்சியமற்ற கூட்டுத்தொகைகு அல்லது நேர்க்கணியத் தொகை விளைவுக்கு இட்டுச்செல்லலாம். இந்த விடயமானது யதார்த்தமான நியாயவிளக்கச் செயற்படுநர் மாதிரிகள்பற்றிய ஆராய்ச்சியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இதை அடிப்படையாகக்கொண்டே பெர்கோவிச் மற்றும் சாட்மன் தங்களது பணியினையும், ஆட்டக்கோட்பாட்டினையும் மேற்கொண்டனர். இதுவே யூரி மற்றும்

பிஷர் என்போரது பணியின்மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளது (பிராம்ஸ் 1990 பார்க்கவும்). மோதுகை முடிவுறுத்தலின் நடைமுறைக்கு அறிவுபூர்வமான தெரிவும், ஆட்டக்கோட்பாடும் பிரயோகிக்கப்படுவதால், அனைத்தையும் பார்க்கும் பிரதான செயற்பாட்டாளர்களாகக் கருமமாற்றும் அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்கள் அறிவுபூர்வமான செயற்பாட்டாளர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் தமது நலன்களைக் கணிப்பிட்டு, இறுதியில் ஓர் அறிவுபூர்வமானதும், பரஸ்பரம் நன்மைபயக்கின்றதுமான இலக்கினைநோக்கி இறுதியில் ஒன்றாகப் பணியாற்றுவர். இரண்டு கோட்பாடுகளுமே நிச்சயமற்ற நிலைமைகளின்கீழ் பின்னிய செயல்விளைவாற்றும் செயற்பாட்டாளர்களின் பயன்பாட்டுக்கான, மிகச்சிறந்த ஓர் உத்தியை வடிவமைப்பதை நோக்காகக்கொண்டுள்ளன.

இந்த அறிவுபூர்வமான செயற்பாட்டாளர் என்னும் கருதுகோளினை அடிப்படையாகக்கொண்ட ஆட்டக்கோட்பாட்டு மாதிரியாக்கமானது எவ்வாறு பரஸ்பர திருப்தி அல்லது பேதங்களுக்கு மிகச்சிறந்தமுறையில் இடம்கொடுக்கும் சுயநல அக்கறைகள் என்பன தன்முனைப்பு (யதார்த்த) அதிகார அரசியலின் இயற்கையான விளைவாக இருக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. வேறுவார்த்தைகளில் கூறுவதாயின், ஒரு தரப்பினரின் வெற்றி மற்றையவரின் தோல்வியில்தான் கட்டாயம் அமையவேண்டும் என்ற அவசியமற்ற ஒரு பூச்சியமற்ற தொகையாட்டம் என்பதாக எண்ணக்கருவாக்கம் செய்யப்படலாம். இவ்வாறாக, நடத்தைகளின் அறிவுபூர்வமான தெரிவுமாதிரிகளை அடிப்படையாகக்கொண்ட ஒருங்கிணைவான மற்றும் பகிர்ந்தளிப்புமிகு பேரம்பேசுதலானது இருதரப்பிலுமுள்ள தீர்மானம் மேற்கொள்பவர்களுக்குச் செலவு அனுகூலம் பயக்கக்கூடியது என்பது நிரூபணமாகின்றது (மேலும் பார்க்கவும்) பெனட் 1996 157 - 184).

பகிர்ந்தளிப்பு அணுகுமுறையானது பாரம்பரியமான பூச்சியத் தொகைப் பேரம்பேசுதலுடன் தொடர்புபட்டுள்ள அதேவேளை, பேரம்பேசுதல் என்பது பேச்சுவார்த்தைப் பங்காளர்களிடேயே ஒரு பகிரப்பட்ட பிரச்சினையாக இருக்கின்றது என ஒருங்கிணைவான அணுகுமுறையானது கருதுவதுடன், பூச்சியமற்ற கூட்டுத்தொகை அல்லது நேர்கணியப் பெறுபேற்றினை அடையாளம் கண்டு பற்றிப்பிடித்துக்கொள்ள விளைகின்றது.

மோதுகை முடிவுறுத்தல் அணுகுமுறையில் நிலைப்பாடுகள் மற்றும் நலன்களுக்கிடையிலான வித்தியாசத்திலே விசேடமாகக் கவனம்செலுத்தியவாறாக இரு தரப்பினரும் சூழமைவு நிலைமைகளை போதியளவு தெளிவுபடுத்தவேண்டியது அவசியம். நிலைப்பாடுகள் என்று கூறும்போது அவை அதிகளவிற்கு மேற்போக்கான, குறுகியகால நிலைப்பாட்டினை வரைவிலக்கணம் செய்கையில், நலன்கள் கூடுதலான ஒவ்வொரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் கொண்டுள்ள அடிப்படையானதும், நீண்டகாலத்துக்குரியதுமான பணயப்பங்குகளையே அதிகளவிற்குப் பிரதிபலிக்கின்றன.

மோதுகை முடிவுறுத்தல் நிலைமைகளில் நிலைப்பாடுகள் என்பவை பொதுவாகவே பேச்சுவார்த்தைகளுக்குள்ளாக்கப்பட முடியாதவைகளாகவே கருதப்படுகின்றன. ஆயினும், ஒவ்வாரு தரப்பினரதும் நலன்களை மற்றய தரப்பு ஏற்றுக்கொள்ளுவதற்கான அதிகளவிலாளான சாத்தியக்கூறு உள்ளது. ஒவ்வாரு தரப்பினரினதும் நோக்குநிலையில் கூடுதலான உளவியல் அம்சங்கள் அவர்களின் உண்மையான நலன்களுக்கிடையேயான இணைவொத்த தன்மையின் மட்டத்தினால் உறுதியாகச் செல்வாக்குச் செலுத்தப்படுவதுடன், தீர்மானிக்கவும்படுகின்றன.

மோதுகை முடிவுறுத்தல் விடயப்பரப்பில் இடம்பெற்றுள்ள அதிகளவான ஆராய்ச்சிகள் பிரதானமாக மூன்றாந்தரப்பினரின் பண்புகள் மற்றும் அவற்றின் உத்திகளிலேயே கவனஞ்செலுத்தியிருக்கின்றன. இப்பண்புகளும், உபாயங்களும் ஒரு பூச்சியத்தொகை மோதுகை முகாமைத்துவச் செயல்முறையினை பூச்சியமற்ற கூட்டுத்தொகை மோதுகை முகாமைச் செயல்முறையாக நிலைமாற்ற உதவுவதுடன், அதன்மூலமாக வன்முறையினை முடிவுக்குக்கொண்டுவந்து ஏதோ ஒரு வடிவிலான அரசியல் உடன் படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கும் வழிகோலுகின்றன. இராணுவ,

அரசியல் மற்றும் சமயத் தலைவர்களும் மற்றும் தடம் 1 மட்டத்தில் உள்ள தீர்மானம் மேற்கொள்வோருமே இத்துறையிலுள்ள பிரதான செயற்பாட்டாளர்கள் ஆவர். இவற்றிலே உத்தியோகபூர்வமான மற்றும் செல்வாக்குப் பயன்படுத்துதல், உண்மைகளைக் கண்டறியும் தூதுக்குழுக்கள், இலகுபடுத்தல்கள், பேச்சுவார்த்தை மற்றும் இணக்கப்படுத்தல் என்பவைபோன்ற உத்தியோக பூர்வ, பலவந்தமற்ற உபாயநடவடிக்கைகள் முதற்கொண்டு அதிகார இணக்கப்பாடு, தடைகள் மற்றும் நடுத்தீர்ப்பு (மேலே பார்க்கவும்) போன்ற மிகுந்த பலவந்தமான செயல்முறைகள் வரையிலான ஒரு வீச்சில் அமைந்த அனேகமான உத்திகள் பயன்படுத்தப்படுகிறன்றன. பொதுவாக மூன்றாம் தரப்பினரின் குறுகியகால ஈடுபாட்டின் சான்றாகவே மோதுகை முடிவுறுத்தலின் மிகுந்த பலவந்தமான உத்திகள் காணப்படுகின்ற அதேவேளை வசதிப்படுத்தல், உண்மைகளைக் கண்டறியும் தூதுக் குழுக்கள் மற்றும் செல்வாக்கைப் பயன்படுத்துதல் போன்று பலவந்தமற்ற உத்திகள் ஒரு நீண்டகாலக் கண்ணோட்டத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன. நேரடியான வன்முறை மற்றும் அதன் எதிர்மறையான அழிவுதரும் பின்விளைவுள்மீதான கவனக்குவிப்பானது தெளிவாகவே விளைவின்பால் திசைமுகப்படுத்தப்பட்டதாகும். ஒரு யுத்தநிறுத்தம் அல்லது பகைமை நிறுத்தம் மூலமாக வன்முறை மிகு மோதுகையை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக்கொண்டுள்ள அனைத்து உத்திகளும் ஏதோ ஒரு வழியிலே இறுதியில் நம்பிக்கையூட்டும் வகையிலே நிரந்தரமான அரசியல் உடன்பாட்டிற்கு இட்டுச்செல்லும் என்னும் நம்பிக்கை உள்ளது. எனவே மோதுகை முடிவுறுத்தல் உத்திகள் ஒப்பீட்டளவிலே வரையறுக்கப்பட்ட வெற்றி மற்றும் சமாதானத்தின் எண்ணக்கருக்களிலிருந்து செயற்படுகின்றன. இதிலே வெற்றி என்பது நிலைபேறான இரு தரப்பினருக்கும் சாதகமான தீர்வு என வரைவிலக்கணப்படுத்தப்டுகின்றது. மேலும் சமாதானம் என்பது நீண்டகால, சாதகமான சமாதானம் அல்லது சமூகநீதி என்பவற்றுக்கான நிர்ணயிக்கப்பட்ட எவ்வித குறிக்கோளுமற்றதான முற்றிலும் எதிர்மறையான பதமாகவே நோக்கப்படுகின்றது.

3.2 மோதுகைத்தீர்வு என்னும் விடயம்

மோதுகைத்தீர்வு என்பது நேரடியான பண்பாட்டு ரீதியான மற்றும் கட்டமைப்புரீதியான வன்முறையின் காரணங்களுக்குத் தீர்வுகாண்பதை நோக்ககமாகக் கொண்ட, செயல்முறை சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் குறிக்கின்றது. கட்டமைப்புரீதியான வன்முறை என்பது சமனற்ற அதிகாரம், ஆதிக்கம் மற்றும் தங்கியிருத்தல் போன்றவை தொடருகையில், ஒரு மோதுகைச் சூழ்நிலையில் சமூக அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பினை வரைவிலக்கணம் செய்கின்றது. பண்பாட்டு வன்முறை என்பது நேரடியான மற்றும் கட்டமைப்புரீதியிலான வன்முறைக்கு சமூக மற்றும் பண்பாட்டு ரீதியில் சட்டநிலைத்தகவு வழங்குவதைக் குறிக்கின்றது. ஒரு கல்வியியலாளர் மற்றும் செயற்பாட்டாளர் என்ற ரீதியில் பேர்ட்டன் மோதுகைத் தீர்வு அணுகுமுறையில் தனது தடங்களை வெகுவாகப் பதித்துச் சென்றிருப்பதனால் அருடைய பணியானது ஓர் எடுத்துக்காட்டுமிகு உதாரணமாகக் கொள்ளப்படும். இந்த மோதுகைத் தீவுத்துறையில் பணியாற்றும் ஹோர்ப் கெல்மன், ரொன்பிஷர் மற்றும் லூயி கிறிஸ்பேர்க் போன்றவர்கள் ஏனைய கல்விமான்கள், செயறபாட்டாளர்கள் ஆவர். மோதுகை முடிவுறுத்தல் என்பது பூச்சியத்தொகை மோதுகை முகாமைத்துவ அணுகுமுறையின் சுயதோல்வியை கொண்டுவரும் இயக்கவியலை வெற்றிகொண்டு, அதன்மூலம் மோதுகையினைப் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளைக் கொண்ட ஒரு பகிரப்பட்ட பிரச்சனையாக மீள்கட்டமைப்புச் செய்வதற்கு ஆட்டக்கோட்பாட்டினைப் பயன்படுத்தவே முயற்சிக்கின்றது. அரசுகளுக்கிடையிலான அதிகளவிலான மோதுகைகள் செயற்பாடாத தீர்மானம் மேற்கொள்ளுவதன் விளைவுகள் என்பதை தெளிவாக விளக்கிக் காட்டுவதற்காக ஆட்டக்கோட்பாட்டின் மாதிரிகள், தன்னியக்கத் தொடர்பாடலுக்கும், கட்டுப்பாட்டிற்குமான விஞ்ஞானம் மற்றும் முறைமைக்கோட்பாடு போன்றவற்றினை *முறைமைகள், அரசுகள், இராஜதந்திரம் மற்றும் விதிகள்* என்னும் தனது நூலில் பேர்ட்டன் உதாரணமாகப் பயன்படுத்தியுள்ளார். (பேர்ட்டன் 1968 ஐ பார்க்கவும்) மோதுகை முடிவுறுத்தல் அணுகுமுறைக்கு மாற்றமாக, மோதுகைத் தீர்வானது நீடித்த மோதுகையை

பூர்த்திசெய்யப்படாத மனிதத்தேவைகளின் இயற்கை விளைவு என்று வரையறைசெய்வது என்பதன்மூலம் ஆரம்பிக்கின்றது. இதன்விளைவாக நீடித்த பிரச்சினைகளின் மூலத்தை, அதில் பங்குபற்றுவோரின் குறிப்பான தேவைகளில் காணலாம். மோதுகை பற்றிய இந்த அர்த்தப்படுத்தலானது பேர்ட்டனின் உலக சமூக அணுகுமுறையின் பாரிய செல்வாக்கைக் கொண்டுள்ளது. அவரின் மனிதத்தேவைகள் கோட்பாடுபற்றிய பணியிலும் இதன் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. பின்கூறப்பட்ட விடயமானது பாதுகாப்பு, அடையாளம், அங்கீகாரம், உணவு, உறைவிடம், இடரிலா நிலை, பங்கேற்பு, பங்கீட்டுநீதி மற்றும் அபிவிருத்தி போன்ற அடிப்படையானதும், இருப்புக்கு அத்தியவசியமானதுமான மெய்ப்பொருளாய்வுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான சர்வதேச செயலூக்கத்தினைக் குறிக்கின்றது (பேர்ட்டன் 1990 ஐப்பார்க்கவும்). எனவே மோதுகைத்தீர்வானது மோதுகையை ஒழிப்பதை நோக்கமாகக் கொள்ளாது, மாறாக அகிம்சை வழியில் வெளிப்படுத்தப்படும் மோதுகையானது சமூகமாற்றத்திற்கு அத்தியவசியமான ஓர் ஊக்கி என்பதாகக்கருதுகின்றது. எனவே மோதுகைத்தரப்பினரின் நிறைவேற்றப்படாத தேவைகள் மற்றும் அச்சங்கள் என்பவை காரணத்தினால் ஏற்படும் மோதுகையின் வன்முறைமிகுந்த அழிவுதரும் வெளிப்பாட்டினை இல்லாமற்செய்வதே நோக்கமாகின்றது. அடையாளம், பாதுகாப்பு மற்றும் பங்கேற்புபோன்ற இவ்வாறான தேவைகள் குறித்த தரப்பினர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியபின்பு அவர்களை நிலைப்பாடுகள் மற்றும் நலன்கள் ஆகிய இரண்டினையும் மீள்வரையறை செய்வதற்காகப் பயன்படுத்துவதே முதன்மையானதாகும். என்ன நிலைமைகளின்கீழ் அனைத்துத் தேவைகளும் ஒரேநேரத்தில் பூர்த்திசெய்யப்படலாம் என்பதைப் பேர்ட்டன் கூறாத அதேவேளையில், தேவைகள் மற்றும் தொடர்புகள் ஆகிய இரண்டினையும் நன்கு தெளிவுபடுத்திக்கொள்வதற்காக மோதுகையின் பகுப்பாய்வினை அகல்விரிவாக்குமாறு செயற்பாட்டாளர்களை வலியுறுத்தி வேண்டிக்கொள்ளுகின்றார். இவ்வகையான பகுப்பாய்வுகளில் இருந்து இரண்டு விளைவுகள் ஏற்படுகின்றன. முதலாவது, தேவைகள் பற்றி வலியுறுத்துகின்ற மோதுகை பற்றிய பரந்த பகுப்பாய்வானது பேச்வார்த்தைக்கு உட்படுத்தக்கூடிய நலன்களின்மீதும் கவனம் செலுத்தும் விளைவுகளின்பால் திசைமுகப்பட்ட மோதுகை முடிவுறுத்தல் உத்திகளுக்கு மிகவும் அப்பால் செல்கின்ற உத்திகளை அழைக்கின்றது. இது நலன்களுக்கு மாற்றமாக - தேவைகளும் அச்சங்களும் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த முடியாதவையாக இருப்பதனால் ஏற்பட்டதாகும். ஆனால், மறுபுறத்திலே ஒவ்வொரு தரப்பினரது தேவைகளையும் அச்சங்களையும் கூட்டுறவுவிளைவான முறையில் கையாளுவது சாத்தியமானதாகும். ஏனையவர்களுக்கு மத்தியிலே பேர்ட்டன் அதிகமாக செயல்முறையின்பாலும் மற்றும் தொடர்புகளின்பாலும் திசைமுகப்பட்ட உபாயங்களையும், பலவந்தமற்ற அணுகுமுறைமைகளையும், கட்டுப்படுத்தப்பட்ட தொடர்பாடல் பிரச்சனைகளைத் தீர்க்கும் செயலமைர்வுகள் அல்லது வட்டமேசைகள்போன்ற வடிவிலமைந்த வசதிப்படுத்துதல் அல்லது ஆலோசனைகள்போன்ற உத்தியோகபூர்வமல்லாத (தடம் !!) நடிவடிக்கைகளையும் முன்மொழிந்துள்ளார். இவ்வழியில் நிறைவேற்றப்படும் இலகுபடுத்தல்களும், ஆலோசனைகளும் நேரடியான தொடர்பாடல் மற்றும் ஆழமான மோதுகைப் பகுப்பாய்வினூடாக ஆக்கபூர்வமான பிரச்சினை தீர்த்தலை இலகுபடுத்துவதற்கான செயல்திறன்மிக்க மூன்றாம் தரப்பு முயற்சியினை தன்னகத்தே கொண்டுள்ளன. இரண்டாவது, மோதுகைப் பகுப்பாய்வின் ஆழமாக்கலும், உத்திகளின் விரிவாக்கலும் இச்செயல்முறையிலே அதிக எண்ணிக்கையிலான செயற்பாட்டாளர்கள் ஈடுபடுவதை அவசியமாக்கும். சிவில்சமூகக் குழுக்கள், கல்விசார் நிறுவனங்கள், அனைத்து வடிவிலான சிவில் இணக்கப்பாட்டு அல்லது பிரஜைகள் இராஜதந்திரக் குழுக்கள் மற்றும் சுவடு !! மட்டத்தில் பணியாற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மோதுகைத்தீர்வு அரசசார்பற்ற நிறுவனங்களிலிருந்து இவர்களைப் பெற்றுக்கொள்ளலாம். பிரச்சினை தீர்க்கின்ற செயலமர்வுகளின் தொடர்போன்ற அதிகமான உத்திகள் இடைக்கால ஈடுபாடு என்கின்ற வடிவத்தினை எடுக்கின்ற அதேவேளை, ஒரு கலந்துரையாடலை நிலைபேறாக்கி அபிவிருத்தி செய்கின்ற செயல்முறையினை குறுகியகால ஈடுபாடு என சிறப்பாகப் புரிந்துகொள்ளவேண்டும். உண்மையிலேயே தரப்புகளுக்கிடையிலேயான அதிகரித்த ஒத்துழைப்பும், மேம்படுத்திய தொடர்பாடல் ஊடான ஆழமான பொதுவான நலனும் மற்றும் பகிரப்பட்ட தேவைகளும் மோதுகை முகாமைத்துவத்தின் வெற்றிகரமான

விளைவின் ஒரு வடிவத்தை தன்னகத்தே கொண்டிருக்கலாம். பேர்ட்டனின் மனிதத்தேவைகள் அணுகுமுறையின் போக்கின்படி நோக்குகையில் எவ்வடிவிலான வெற்றிகரமான விளைவும் இருதரப்பினரினதும் தேவைகளின் பூர்த்தியாக்கலுக்கான ஆகக் குறைந்த நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல்வேண்டும்.

3.3 மோதுகை மாற்றுநிலையாக்கம் என்னும் விடயம்

மோதுகை மாற்றுநிலையாக்கம் என்பது நேரடி பண்பாட்டு மற்றும் கட்டமைப்பு வன்முறைகளின் வெளிப்பாட்டு வடிவங்களை உண்மையாக வெற்றிகொள்வதை நோக்கமாகக்கொண்ட விளைவு, செயல்முறை மற்றும் கட்டமைப்பு என்பவைசார்ந்த நீண்ட கால சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளைக் குறிப்பதாகும். இத்துறையிலே பணியாற்றும் மிகவும் குறிப்பிடத்தக்க கல்விப்புலமையாளர்கள் செயற்பாட்டாளர்கள் லெடராச் (1995 மற்றும் 1997), கேர்லின் (1971) மற்றும் மோதுகை, சமாதான ஆராய்ச்சியாளர் கல்துங் (1996)என்போராவர். மோதுகை மாற்றுநிலையாக்கமானது முன்னயை இரண்டு அணுகுமுறைகளின் நோக்கங்களுக்கும் அப்பால் நகர்ந்து செல்கின்ற அதேவேளையில், மோதுகைத்தீர்வின் பல யோசனைகளையும், குறிப்பாக ஜோன் பேர்ட்டனின் ஒரு மோதுகைத்தடுப்பு "எண்ணப்போக்கினையும் எடுத்துக் கொள்கின்றது." மோதுகைத்தடுப்பு என்பதன் கருத்து மனிதப் பரிமாணங்கள் உள்ளிட்ட மோதுகைப் புலன்நிகழ்வுகுறித்த போதிய விளக்கத்திலிருந்து விடயங்களைப் பெற்றுக்கொள்வதாகும். இது வெறுமனே மோதுகைடுச் சூழலைத் தோற்றுவிக்கும் மற்றும் அதை அகற்றுவதற்கு தேவைபடுகின்ற கட்டமைப்பு மாற்றங்களிலிருந்து மட்டுமன்றி மேலும் இல்லாத முக்கியமான ஒத்துழைப்பு உறவுகளை உருவாக்குகின்ற நிலைமைகளை முன்னேற்றுவதிலிருந்தும் விடயங்களைப் பெற்றுக்கொள்வதாகும் (பேர்ட்டன் மற்றும் டியூக்ஸ் 1990 ப.2 ஐ பார்க்கவும்).

பேர்ட்டன் தன் உள்ளத்தில் எவற்றினைக் கொண்டிருந்தாரோ அவை பிரதானமாகக் கிடைநிலையான உறவுமுறைகளாகும். அதாவது உதாரணமாக, சுவடு!! இன் பிரச்சினையை தீர்க்கும் செயலமர்வுச் சூழமைவில் ஒப்பீட்டளவில் சமமான அந்தஸ்தினையுடைய முரண்படும் தரப்புக்களின் அல்லது செயற்படுநர்களின் கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கள் (பார்க்க லெடராச் 1999 ப.29-30 என்பதைப் பர்க்கவும்). எவ்வாறாயினும், மோதுகை முடிவுறுத்தல் அணுகுமுறையானது சமமற்ற அந்தஸ்தினையுடைய செயற்பாட்டாளர்களுக்கிடையில் கலந்துரையாடலையும், ஒத்துழைப்பையும் உருவாக்குகின்ற நிலைக்குத்தான உறவுமுறைகளை மேலும் அபிவிருத்திசெய்து கட்டி எழுப்புவதற்கான ஒரு முக்கியமான வாய்ப்பினை தவறவிட்டுவிட்டது. இவ்வாறான விடயமே பெரும்பாலும் தடம் !ன் தீர்மானம் மேற்கொள்பவர்களிடத்தும் மற்றும் தடம் III இன் அடிமட்டத்தலைவர்களிடத்தும் காணக்கிடக்கின்றது. இந்த வாய்ப்பு இப்பொழுது மோதுகை மாற்றுநிலையாக்க அணுகுமுறையினால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது (அதே நூல் ப.ப 30-31). விசேடமாக லெடராச்சினால் முன்வைக்கப்பட்டதுபோல, மோதுகை மாற்றுநிலையாக்கமானது இந்தப் பிரச்சினையின் மீது மிகமுக்கியமான வலியுறுத்தலைச்செய்கின்றது. கவனக்குவிப்பின்மீதான இந்தப் பகுப்பாய்வு ரீதியிலான மற்றும் நடைமுறைரீதியிலான விலகலானது பல எடுகோள்களை அடிப்படையாகக்கொண்டதாகும். முதலாவதாக, தேவைகளைப் பூர்த்தியாக்கல் என்கின்ற பேர்ட்டனின் எண்ணப்போக்கினை அடிப்படையாகக் கொள்ளும்போது, எந்த ஒரு வெற்றிகரமான மோதுகை நிலைமாற்ற உத்தியும் சமாதான உருவாக்கச் செயல்முறையின் தடம் III இன் செயற்படுநர்களை உள்ளடக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் வன்முறை மோதுகையின் விளைவுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களுடனேயே பணியாற்றிவருகின்றனர் (பார்க்க லெடராச் 1995 மற்றும் 1997). ஆரம்பத்தில் இவ்வாறு பாதிக்கப்படடவர்களின் அடிப்படைத்தேவைகள் நிறைவேற்றப்படாமையே ஆழமாக வேரூன்றிய வன்முறைக்கும், வெறுப்புக்கும் இட்டுச்செல்கின்றது. இரண்டாவதாக, தடம் !!! இன் செயற்படுநர்களையும், உத்திகளையும் உள்ளடக்குவது என்பது

மோதுகை முடிவுறுத்தல் அணுகுமுறையில் மிகவும் முக்கியமாகின்ற முகாமைத்துவத்தின் தர்க்கவியலில் இருந்து வெகுதூரத்திலான ஒருவிடயமாகும். உண்மையிலேயே, இந்த இயலுமையைக் கட்டியெழுப்புதல், வலுவூட்டல் செயலமர்வுகள் போன்ற தடம் III இன் உத்திகள் வலுவூட்டல் (ஷஷஉள்நாட்டில்'') தர்க்கவியலையே பிரதிபலிக்கின்றன. மேலும், கீழிருந்து மேலான தடம் III இன் உத்திகள் சமூகநீதிக்கான உள்நாட்டுப் போராட்டத்திறகு ஆதரவுதெரிவிப்பதை அல்லது அதனை உருவாக்கி அதன்மூலமாக தீவிரமான கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவதையே நோக்கமாகக்கொண்டுள்ளன. குறிப்பிட்ட பிராந்தியம் அல்லது சமூகத்திலே சமாதான உருவாக்கத்திற்கான சாத்தியவளம் ஏற்கனவே இருப்பதுடன், அவை அதன் பாரம்பரிய பணபாட்டில் வேரூன்றிப்போயுள்ளன என்பதே இதற்கு அடிப்படையான ஊகமாகும்.. இவ்வாறாக, குறிப்பிட்ட மோதுகைச்சூழலில் பண்பாட்டுத் தகவல்கள் மற்றும் வளஆதாரங்களின் தாக்கம் பற்றி சிறிதளவு விளக்கம் உள்ள அல்லது விளக்கம் அற்ற நிலையில், மோதுகை முகாமைத்துவ தொழில் நுட்பங்களை பண்பாடுகளின் ஊடாக எளிதாக மாற்றமுடியாது, மாற்றவும் கூடாது (லெடராச் 1995).. உள்ளூர் போராட்டங்களை அடிப்படையாகக்கொள்வது என்பதால் அர்த்தப்படுத்தப்படுவது ஒரு சமூகமானது மோதுகையைக் கையாளுவதற்கு பயன்படுத்துவதற்காக முன்பே இருந்துவரும் பாரம்பரிய வழிமுறைகளைப்பற்றி அறிந்திருப்பது என்பதாகும். இதற்குச் சிறந்த உதாரணமாக சோமாலியாவில் காணப்படுகின்ற முதியோர்கள் முறைமையினைக் குறிப்பிடலாம். அவர்கள் ஒரு கோத்திரத்தின் உறுப்பினாகள் என்ற ரீதியிலே, மோதுகின்ற தரப்பினர்கள் அவர்களின் மோதுகையை முடிவுறுத்தி ஓர் உடன்பாட்டை ஏற்றுக்கொள்ளுமாறு பலவந்தப்படுத்துவதற்காகத் தங்களின் பாரம்பரிய அதிகாரத்தை முயன்று பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

'ார்ப் (1973), காந்தி (1938 மற்றும் 1950) மற்றும் கிங் (1963) போனறவர்களினால் முன்வைக்கப்பட்ட அகிம்சை நடவடிக்கைகளின் கோட்பாட்டுரீதியிலான கட்டுக்கோப்பின் சூழமைவில் தடம் III இன் செயற்பாடுகள் பொதுவாக இடம்பெற்றுச் சிறந்தமுறையில் புரிந்துகொள்ளப்படுகின்றன. இந்த மூன்று தீவிர செயற்பாட்டாளர்களும்ஃ கல்விப்புலமையாளர்களும் மிகவும் வித்தியாசமான சமயப்பற்றுக்கொள்கைகளின் சித்தாந்தங்களினது செல்வாக்குக்கு உட்பட்டிருந்தபோதிலும், மோதுகை என்பது சமூகநீதிக்கான ஓர் அகிம்சைப்போராட்டம் என்னும் எண்ணப்போக்கினையே பகிர்ந்துகொண்டனர். அகிம்சை நடவடிக்கைகள் ஏற்கெனவே இருந்துவருகின்ற, ஆனால் மறுக்கப்படுகின்றவையும், மூடிமறைக்கப்படுகின்றவையுமான பதற்றங்களையும், மோதுகைகளையும் மேற்பரப்புக்குக் கொண்டுவருகின்றன (மக்கார்த்தி மற்றும் 'ார்ப் 1997 XVI). அடிப்படையிலேயே மக்களின் சக்தி வடிவிலே அமைந்த "ஆக்கபூர்வமான அகிம்சை பதற்ற நிலைகளைக்" கைக்கொள்ளுவது மூலமாகவே மறைந்திருக்கின்ற முரண்பாடுகள் வெளிக்காட்டப்படுகின்றன. சமூகரீதியாக அல்லது அரசியல்ரீதியாக ஒடுக்கப்பட்ட குழுமங்கள் சுரண்டல்மிக்கதும், அடக்குமுறை நிறைந்ததுமான உறவுகளின் வலுக்கட்டாயநிலையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்வதற்காக இந்தவழியில் அணிதிரளலாம். இவ்வாறான மக்களின் சக்தியானது ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் மற்றும் ஒத்துழையாமை முதல் (பொருளாதாரப்) பகி'கரிப்புவரையிலான வீச்சிலமைந்த பல்வேறுவிதமான அகிம்சைப்போராட்ட வடிவங்களிலேயே வெளிப்படுத்தப்படலாம். இவ்வாறு நோக்குகையில், சமனற்ற சமூக, அரசியல் கட்டமைப்புகளின் விளைவாகவே நீடித்த வன்செயல் மோதுகைகள் உருவாகின்றன. எனவே, அவற்றை செயல்திறன்மிகு முறையிலே கையாளுவது அகிம்சைப் போராட்டவடிவிலே ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் வலவூட்டலையும், அங்கீகரித்தலையும் அவசியப்படுத்தும். வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், நேர்மைமிகு பேச்சுவார்த்தையில் நுழைவதற்கும், உள்நாட்டுமட்டத்திலே உடனடியாக கவனத்தில்கொள்ளவேண்டிய விவகாரங்களை கையாளுவதற்கும் அல்லது தடம் 1 இன் மீது (மற்றும் தடம் 11 செயற்படுநர்கள்மீது) பொருத்தமான அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கும் இந்த வழிமூலம் மாத்திரமே சாத்தியமாகும்.

இதைத் தெளிவாக விளக்குகின்ற ஓர் உதாரணத்தினை 1990களின் ஆரம்பகால சோமாலியாச்

சூழமைவில் மீண்டும் காணலாம் (லெடராச் 1997 ப.ப 52-53). எவ்வாறு யுத்ததினை முடிவுக்குக் கொண்டுவருவது என்பது பற்றிய தொடரான கலந்துரையாடல்களுடனும் உடன்படிக்கைகளுடனும் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் நோக்கியதான அணுகுமுறைகள் ஆரம்பித்தன. இவை பல்வேறு உபகோத்திரங்களை ஒன்றிணைத்த உள்ளூர் சமாதான மாநாடுகளினுள் இடம்பெற்றன. ஒவ்வொரு கோத்திரத்தினதும் அச்சங்களையும், நலன்களையும் உரியமுறையில் ஆதரித்துப்பேசி, அதன்மூலம் உடனடியாகக் கவனத்தில்கொள்ளவேண்டிய மையநிலை விடயங்கைளை உள்ளூர்மட்டதிலே முன்வைக்கக்கூடிய, சட்டநிலைத்தகவுபெற்ற பிரதிநிதிகளை அழைப்பதில இந்த மகாநாடுகள் கவனம்செலுத்தின. இவ்வாறான உள்ளூர் மாநாடுகள் உடன்படிக்கைகளை அணுகுகின்ற வேளையில், இதேபோன்ற தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறை பரந்துபட்ட வீச்சிலான கோத்திரங்களை ஈடுபடுத்தியதாக உயர்மட்டத்திலே மீளவும் மேற்கொள்ளப்பட்டது. மோதுகை முடிவுறுத்தல் மற்றும் போதுகைத்தீர்வு அணுகுமுறைகளில் உள்ள தடம் I மற்றும் தடம் II செயற்பாட்டாளர்கள் சிவிலியன் மக்களையும், அடிமட்டநிலையில் உள்ளவர்களையும் செயலற்றவர்களாக நோக்கும் அதேவேளையில் தடம் III இன் உத்திகள் அவர்களை மையநிலையில் இருத்துகின்றன. எனவே மோதுகைத்தீவு அல்லது மோதுகை முடிவுறுத்தல் என்பவற்றின்கீழ் இருப்பதுபோல மோதுகை மாற்றுநிலையாக்கமானது அடிப்படையிலேயே மூன்றாந்தரப்பினரின் தலையீட்டின் விளைவாக இருக்காது.

தடம் I அணுகுமுறைகளோ அல்லது தடம் II அணுகுமுறைகளோ (இரண்டும் சோர்ந்தோ) தற்கால வன்முறைமிகு மோதுகைச் சூழமைவில் தேவைப்படுகின்ற சமாதான உருவாக்க நடவடிக்கைகளின் சிக்கல்தன்மையையும், அவற்றின் இயக்கவியலையும் பற்றிய பூரணமானதும், திருப்பதிகரமானதுமான விளக்கத்தை வழங்க இயலாதவை என்பது தெளிவானதாகும். இது சமாதான உருவாக்கச் செயல்முறைகளிலே தடம் III இன் உத்திகளை உள்ளடக்குவதன் தேவையினைக் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாது செயற்பாட்டாளர்கள் பல்வேறுவிதமான உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச செயற்படுநர்களுக்கிடையில் முக்கியத்துவம்மிக்க முன்னணியை உருவாக்கவேண்டுமாயின் அல்லது உள்நாட்டு சமாதான மக்கள் குழுவை உருவாக்கவேண்டுமாயின் அவர்கள் மூன்று தடங்கள் மீதுமான நாடவடிக்கைகளை இணைக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. மூன்று தடம் உபாயங்களும் ஒன்றிணைந்திருக்கும் போதும் முழு நிறைவாக்குபவையாக இருக்கும்போதுமே நன்றாக விளங்கிக்கொள்ளப்படுகின்றன என்பதையே இது குறிக்கின்றது. மேலும், முன்பு கூறியதற்கு ஏற்ப, இநத் வடிவிலான மூன்று மோதுகை இடையீடுகளும் ஒரு மோதுகையின் வாழ்க்கை வட்டத்திலே அவற்றுக்குப் பொருத்தமான இடத்த்தினைக் கொண்டிருக்கின்றன என்று கூறுவது சாலப்பொருத்தமானது என்றே தோன்றுகின்றது. எனவே, தடம் II மற்றும் தடம் III இன் நடவடிக்கைகள் வெளிபடையாகத் தோல்வியுற்ற தடம் I இன் உத்திகளுக்கான பதிலீடுகளாகவோ அல்லது சஞ்சீவியாகவோகூடக் கருதப்படலாகாது என்ற போதிலும், அவை தடம் I இன் நடவடிக்கைகளை முழுநிறைவாக்கலாம். மீண்டும் இங்கே ஒருவர் இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனியர்களுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஓம்பி அதை இலகுபடுத்திய நோர்வீஜியத்தம்பதிகளின் உதாரணத்தின்பால் திரும்பிப்பார்க்கவேண்டியுள்ளது. அவர்களின் பணியானது செயல்திறன்மிகு துறையிலே முறைசார் பேச்சுவார்த்தைக்கு களம் அமைத்துக்கொடுத்த அதேவேளையில், பொருண்மைப் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தைமூலம் தீர்வுகாணும் தேவையினை அது எச்சந்தர்ப்பத்திலும் தேவையற்றதாக்கவில்லை (பார்க்க லெடராச் 1997 ப.34).

முன்கூறிய அதேவழியில் பார்க்கையில், நீண்டகால மீளிணக்கப்பாடு மற்றும் சமூகநீதி என்பவற்றின் விழுமிய இலட்சியங்களைப் பொறுப்பேற்பதற்கான ஆற்றல்தடம் I இன் செயற்பாடுகளுக்கும், உத்திகளுக்கும் இல்லாதிருக்கலாம். அதேவேளை, தடம் III ன் செயற்பாடுகள் இவ்வாறான பரந்த குறிக்கோள்களை அடைய உதவலாம். ஆனால், அவ்வாறான செயற்பாடுகள் சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் அதிகாரப்பகிர்வு என்பவற்றின் மாதிரிகள் மற்றும் இனத்துவ எல்லைகளினூடே சட்ட

மற்றும் ஆட்சிக்கட்டமைப்புகளில் சுயாட்சி மாதிரிகளைப் போன்ற தடம் I இன் மட்டத்திலான கட்டமைப்புமாற்றங்கள் மூலமாக முழுநிறைவாக்கப்படாவிட்டால், அவை முடிவில் செயலற்றதாகவே தொடர்ந்தும் இருக்கும், அல்லது தோல்விக்கென்றே தீர்க்கப்பட்டவைகளாக ஆகிவிடும். மோதுகை முகாமைத்துவத்துக்கான ஒரு நடைமுறை அல்லது கோட்பாட்டுரீதியிலான அணுகுமுறையிலேயே பிரத்தியேகமாகத் தங்கியிருப்பது அதிகமான நீடித்த மோதுகைகளில் காணப்படும் காரணங்கள் மற்றும் விளைவுகளின் சிக்கல்தன்மையினையும், மோதுகைகளையும் செயற்திறன் மிகுமுறையில் கையாளத்தவறிவிடும் என்பதே உள்ளார்ந்த கருதுகோள் ஆகும். இக்கருத்தின் தர்க்கரீதியான முன்னெடுப்பானது தடம் I, II மற்றும் III இன் செயற்பாடுகளை நடைமுறைரீதியாக மட்டுமன்றி கோட்பாட்டு ரீதியாகவும் முழுமையாக்கி, இணைக்கும் முயற்சியேயாகும். கடந்த காலங்களிலே அதிகமான மோதுகை முகாமைத்துவக் கல்விப்புலமையாளர்கள் ஆட்டக்கோட்பாடு, மனிதத்தேவைகள் கோட்பாடு மற்றும் அகிம்சைக்கோட்பாடு போன்ற பல்வேறுவிதமான கோட்பாட்டுரீதியிலான அணுகுமுறைகளை ஒன்றிணைப்பதற்கு தயக்கம் கொண்டவர்களாகவே இருந்துள்ளனர் (அவ்வாறு அவர்கள் ஒன்றிணைத்திருந்தாலும் அதைப்பற்றி அவர்கள் நிச்சயமாக வெளிப்படையாகப் பேசவில்லை). ஏன் இது நிகழவில்லை என்பதற்கு எண்ணிப்பார்க்கக்கூடிய பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, முகாமைத்துவத்தின் வாதக்போக்கிலே மையம்கொண்டிருந்த மோதுகை முடிவுறுத்தலானது தற்போது பரந்த அளவில் நிராகரிக்கப்படும் அதிகார அரசியல் நெறியுதாரண மாற்றத்துடன் ஆழமாகத் தொடர்புபட்டது என நோக்கப்பட்டிருக்கலாம்.

மோதுகை முடிவுறுத்தல் மற்றும் மோதுகைத் தீர்வு அணுகுமுறைகள் என்பவற்றின் போட்டிக்குரிய அனுகூலங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் விரிவாக விளக்கிக்காட்டுவதைப்போல, விசேடமாக மோதுகை முகாமைத்துவத்துறையிலே செயற்படுத்தப்பட்ட ஆரம்பகாலப் பணிகளிலே கல்விப்புலமையாளர்கள் எண்ணப் போக்குகளுக்கு இடையிலே ஒன்றுமைகளைக் கண்டுபிடிப்பதைவிட வித்தியாசங்களை அடையாளம் காணுவதிலேயே அதிக கவனத்தைச் செலுத்தத் தலைப்பட்டனர். பொதுவாகவே, இத்துறையானது நீண்டகாலமாகவே நன்கு உறுதியாக நிலைத்துவிட்ட இருகூறான சிந்தனைப்போக்குகளால் அடையாளமிடப்பட்டிருந்து. மோதுகைத்தீர்வு உத்திகளுடன் ஒப்பிடுகையில் அதற்கெதிரான மோதுகை முடிவுறுத்தல்களின் உத்திகள் மற்றும் அகவய நிலையாளர் விளக்கத்திற்கெதிரான புறவயநிலையாளர் விளக்கங்கள் என்பவையே இவையாகும்.

மேலே காட்டியவாறாக, உதாரணமாகக் கூறுவதாயின், மோதுகைத்தீர்வினில் கவனத்தைக் குவித்தவாறாகப் பிரச்சினையைத் தீர்க்கும் செயலமர்வுகளுடன் பணியாற்றும் கல்விப்புலமையாளர்கள் மோதுகை முடிவுறுத்தல் கல்விப்புலமையாளர்களைவிட மிகவும் வித்தியாசமான பகுப்பாய்வுக்குரிய சட்டகங்களை (தேவைகள் மற்றும் அச்சங்களைக் கண்டறிதல் போன்றன), அதாவது நலன்கள் மற்றும் நடத்தைகளின் அறிவார்ந்த தெரிவுமாதிரிகள் போன்றவற்றில் கவனம்செலுத்திப் பயன்படுத்தும் போக்குடையோராகக் காணப்பட்டனர் (பார்க்க கிளெமெண்ட்ஸ் 1998 பா.136). அணுகுமுறைகளுக்கிடையிலான தொடர்ச்சியான திசைதிரும்புதல்களுக்கு மிகவும் பொதுவானதும், இறுதியானதுமான காரணம் சில அறிஞர்கள் தமது பணியினை வெளிப்படையான ஊகங்களின் அடிப்படையில் மேற்கொள்ளாமல், உட்கிடையான ஊகங்களின் அடிப்படையில் மேற்கொண்டமையாகும். இதன்காரணமாக அவர்களின் வாதத்தின் கோட்பாட்டுரீதியான ஆதாரங்களை வார்த்தைகளில் வழங்கத்தவறிவிட்டார்கள். மோதுகை நிலைமாற்றத்தினை முன்பிருந்த மாதிரிகளின் எண்ணக்கருசார்ந்த நடைமுறைக்குரிய ஒரு முன்னெடுப்பு மற்றும் முன்பிருந்த மாதிரிகளின் ஒரு பயன்மிகுந்த இணைப்பு என்பதாக ஒருவர் கருதவேண்டுமாயின், ஆட்டக்கோட்பாடு, அறிவார்ந்த தெரிவு, மனிதத்தேவைகள் கோட்பாடு மற்றும் அகிம்சைச் செயற்பாடு என்பவற்றின் ஒரு வகையிலான தொகுப்பினைக் கொண்டிருப்பது அர்த்தமுள்ளதாவிருக்கும். இவற்றை எடுத்துவிளக்கும் உதாரணத்தினை பிரச்சினைதீர்க்கும் செயலமர்வுகளில் காணாலாம். அவை காந்தி, கிங், மற்றும் சார்ப் போன்றவர்களின் அகிம்சைச் செயற்பாடுகளின் பல்வேறுவிதமான மூலங்களினால்

உணர்வுபெற்றன. இச்செயற்பாடுகள் அனைத்துமே எதிரியை மதித்தல் மற்றும் பரஸ்பரம் நன்மை பயக்கும் விளைவுக்கான தேடல் என்பவற்றின் ' தேவையை வலியுறுத்துகின்றன (மிச்செல் 1981 ப.71 - 86). பரஸ்பரம் நன்மைபயக்கும் விளைவுகள் அதிகமான ஆட்டக்கோட்பாட்டு அணுகுமுறைகளின் மைய எண்ணைக்கருக்களிலும், நோக்கங்களிலும் ஒன்றாகும்.

சுருங்கக் கூறுவதாயின், முழுநிறைவாக்கும் தன்மையே பிரதானமானதாக இருக்கவேண்டுமாயின், மேலும் அது வருகின்ற இடத்தின் பெறுமானத்துக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படவேண்டுமாயின், அதன் தன்மை கோட்பாட்டுரீதியானதாக இருக்கவேண்டும். அத்துடன் அது ஆட்டக்கோட்பாடு, மனிதத்தேவைகள் கோட்பாடு மற்றும் அகிம்சைச்செயற்பாடுகள் என்பவற்றுக்கிடையில் செயற்திறன்மிகு பின்னிய வளச்செறிவினை அல்லது நலன்பயக்கும் நெருங்கிய இணைவினைக் கொண்டுவரவேண்டும். மனிதத்தேவைகள் மற்றும் அகிம்சைச்செயற்பாடுகள் என்பவற்றினை அடிப்படையாகக்கொண்ட பல்வேறுவிதமான விளக்கங்களை ஒன்றிணைக்கும் அதேவேளையில், மோதுகை மாற்றுநிலையாக்க உத்தியானது மோதுகையின் தன்மைபற்றிய மூன்றுவகை விளக்கத்திலிருந்து ஆரம்பித்தல்வேண்டும். இந்த எண்ணப்போக்கு முதலாவதாகவும், முக்கியமனதாகவும் மோதுகையை அரசியல் கட்டுப்பாட்டுக்கான ஒரு மூலகம் மற்றும் சமூகமாற்றத்துக்கான ஓர் ஊக்கி என்றரீதியிலே நோக்குவதோடு, அதைச் சமூகநீதிக்கான அகிம்சைப்போரட்டத்தின் இயற்கையான வெளிப்பாடாகவும் நோக்குகின்றது. எனவே, மோதுகை மாற்றுநிலையாக்கமானது மோதுகையின் இரட்டை விளக்கத்தை சமூகக்கட்டுப்பாடு மற்றும் மாற்றம் என்பவற்றுக்கான முகவராகவே கருதுகின்றது (கிளெமன்ட்ஸ் 1998 ப. 138). மேலும், மோதுகை மாற்றுநிலையாக்கம் இங்கு நின்றுவிடுவதில்லை. அது மோதுகைத் தீர்வு மற்றும் மோதுகை முடிவுறுத்தல் என்பவற்றுக்கிடையிலான இருபுடைத்தன்மையை அடிப்படையிலே மீள்வரைவிலக்கணப்படுத்தவும் செய்கின்றது சமூகநீதியெனும் பிரச்சினையின்மீது அதன் அடிப்படை வலியுறுத்தலை வைப்பதன்மூலம் மோதுகை மாற்றுநிலையாக்க அணுகுமுறையானது முன்பிருந்த நிகழ்வுநிலையை மீண்டும் ஏற்படுத்துவது என்னும் மோதுகை முகாமைத்துவத்தின் பாரம்பரிய நோக்கத்தினை ஒதுக்கிவிடுகின்றது. அதற்குப் பதிலாக, மோதுகை என்பது மாற்றத்துக்கான ஒரு சாதகமான முகவர் என்னும் எண்ணப்போக்கினை உருவாக்கி, தெளிவுபடுத்துகின்றது. மோதுகை மாற்றுநிலையாதக்கம் என்பது அதில் ஈடுபடுகின்ற செயற்பாட்டாளர்களின் திறந்தமுனைகொண்ட நோக்கெல்லையை குறிப்பிடத்தக்க அளவு விரிவுபடுத்துகின்றதான ஒரு நீண்டகால, பல்சுவட்டிலான இயக்கவியல் செயல்முறையாகும். அது தடம் I, II மற்றும் III இன் செயற்பாடுகளை குறுகியகால, இடைக்கால மற்றும் நீண்டகால ஈடுபாடுகளின் தொடர்நிலைவழியே பயனுறுதியுள்ளவகையில் இணைக்கின்றது. எனவே, அதில் பல்வேறு வகையிலான பரந்த செயற்பாட்டாளர்களை ஈடுபடுத்துவதற்கு சாத்தியம் இருக்கின்றது. பின்வருவோர் அதில் உள்ளடங்குகின்றனர்: உத்தியோகபூர்வ, இராணுவ மற்றும் அரசியல் தலைவர்கள் (சுவடு ஐ), முறைசாரா மோதுகைத்தீர்வு நிபுணர்கள் மோதுகைத் தீர்வினில் பணியாற்றுகின்ற அசாநிகள் மற்றும் அசாநிகள் (தடம் II), அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் மனிதநேய உதவியை வழங்குகின்ற அடிமட்டத்திலான சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் (தடம் III). மிகவும் பரவலாகப் பிரயோகிக்கப்படுகின்ற ஓர் அணுகுமுறையானது கீழிருந்து வரும் சமாதான உருவாக்கத்தின் ஒரு சின்னமாக இனிமேலும் குறைக்கப்படமுடியாது. மேலும், குறைக்கப்படக் கூடாது. மோதுகையின் இந்த மூன்றுவகை விளக்கமானது ஓர் ஒத்திசைவான வெற்றியின் முக்கூறான அர்த்தப்படுத்தலினை எடுத்துக்கூறுகின்றது. அவை விளைவு, செயல்முறை அத்துடன் ஃ அல்லது மாற்றம் என்பவற்றின்பால் திசைமுகப்பட்டவைகளாக இருக்கலாம்.

விளைவுகளைப்பொறுத்த அளவிலே, மோதுகை மாற்றுநிலையாக்கமானது மோதுகைத் தரப்பினரின் தேவைகள் மற்றும் அச்சங்கள் என்பவற்றினால் எழும் பொருண்மைப் பிரச்சனைகளுக்கான முடிவுறுத்தல்களை ஈட்டுவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இது இரண்டு மூலகங்களைக் கொண்டதாகும். முதலாவது தரப்பினருக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடல் என்பவற்றை அதிகரிப்பதற்காக, அவர்கள் மத்தியிலே பரஸ்பரம் எதிர்மறையான மோதுகை மனப்பாங்குகள் மற்றும் பெறுமானங்களினை

மாற்றுவதன் தேவையினை வலியுறுத்துகின்ற ஒரு செயல்முறைசார்ந்த அணுகுமுறை. இரண்டாவது, சலுகைகைள் அற்ற குழுக்களின் வலுப்படுத்தலுக்கும், அங்கீகாரத்துக்குமான ஒரு புதிய உட்கட்டமைப்பை உருகாக்குவதற்கான அரசியல் ஆணையை வலியுறுத்துகின்ற மாற்றம்சார்ந்த ஓர் அணுகுமுறை. அதன்மூலம் சமூகநீதியை வலுவூட்டி முன்னேனற்றலாம். சுருங்கக்கூறுவதாயின், தனிப்பட்ட மற்றும் உறவுரீதியான மட்டங்களில் அடிப்படைத் தேவைகளின் பூர்த்தியானது போதுமானதாக இருக்காது. இதற்குப் பதிலாக, செயற்பாட்டாளர்கள் வளங்களை சமமாகப்பெற்றுக்கௌள்வதற்கும், மேலும் நீண்டகால சமூகபுனர்நிர்மாணம் மற்றும் மீளிணக்கம் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு, கட்டமைப்புரீதியான சமத்துவமின்மைகளுக்கு தீர்வு காணுவதை சாத்தியமாக்கும் வகையில், அகநிலையமைவுகளை நிலைநிறுத்தும் பணியை மேற்கொள்ளுதல்வேண்டும். வெற்றிகரமான விளைவு என்பதை வரைவிலக்கணம் செய்வது மோதுகை முடிவுறுத்தல் மற்றும் தீர்வுபோன்ற எளிமையான விடயங்களில் இருந்ததைவிட மோதுகை மாற்றுநிலையாக்க அணுகுமுறையின் கீழே மேலும் கடினமானதாகும். சமாதானம் என்பது இப்பொழுது சாதகமான சொற்பதங்களில் வரைவிலக்கணம் செய்ப்படுகின்றது. பல்வேறு வடிவங்களிலான கட்டமைப்பு மற்றும் கலாசார வன்செயல்களுக்கு அடுத்தடுத்து தீர்வுகாணுகையில், எதிர்மறையான சமாதானத்தின் வடிவங்களுக்கும் அப்பாற்செல்லுதல் வேண்டும். பல தற்கால நீடித்த மோதுகைகளுக்கு சமூக உறவுகள் மற்றும் சமூக கட்டமைப்புக்களில் பூரண நிலைமாற்றம் அவசியமாகும்.

4. பயன்படுத்தப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் ஆராய்ச்சி முறைகளின் வகிபாகம்

பொதுவாக, மோதுகை முகாமைத்துறையும், குறிப்பாக இந்த மூன்று அணுகுமுறைகளும் கோட்பாடுகளின் ஒருசில சிறிய தீர்வுகளைமட்டும் தொட்டுச் சென்றுள்ளன. உதாரணமாக, சர்வதேச உறவுகளின் அண்மைக்கால விவாதங்களுக்கு மாற்றமாக மோதுகை முகாமைத்துறையானது கோட்பாடாக்கல் இல்லாத பெரிய ஒரு வெற்றிடத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. விசேடமாக, விஞ்ஞான விசாரணைகளின் நோக்கம் பிரயோகிக்கப்படுகின்ற வழிமுறைகள் மற்றும் அறிவின் நியாயப்படுத்தல்கள் போன்றவற்றின் தன்மை சார்ந்த மற்றும் அறிவாதார முறையியல் மற்றும் அறிவை நியாயப்படுத்தல் சார்ந்த விடயங்களின் வினாக்களில் கோட்பாடாக்கல் இல்லாத வெற்றிடம் காணப்படுகின்றது.

பின்வரும் பகுப்பாய்வு இக்கடுமையான விமர்சனத்தை விளக்கமாக எடுத்துக்காட்டுவதாகும். மோதுகை முகாமைத்துவத்துக்கான பல்வேறுவிதமான அணுகுமுறைகளைக் கோட்பாடாக்கம் செய்யும் எந்த முயற்சியும் கட்டாயமாக மோதுகையின் சில குறித்துரைப்பான கோட்பாடுகள்மீது அமைந்ததாக இருத்தல்வேண்டும் என்பது பிரத்தியட்சமான ஓர் உண்மையாகும். எனவே, மோதுகை முகாமைத்துவம்பற்றிய எந்தக் கோட்பாட்டாக்கலும் வன்முறைமிகு மோதுகையின் அடிப்படையான விளக்கத்தின் கோட்பாட்டுரீதியிலான விவாதத்துடன் ஆரம்பிக்கப்படவேண்டும் என ஒருவர் எதிர்பார்க்கவேண்டும். இதிலிருந்து மோதுகை குறித்த இத்தகைய விளக்கம் வெறுமனே கோட்பாட்டு ரீதியானதல்ல. மாறாக அது மோதுகை முகாமைத்துவம் மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கம் சம்பந்தமாக கோட்பாட்டிலும், நடைமுறையிலும் தீவிரமான வேறுபாடுகொண்ட முடிவுகளுக்கு இட்டுச்செல்லும் என்பதும் பெறப்படுவது போலத் தோன்றுகின்றது. மோதுகை முகாமைத்துவ விடயவிதானம்மீது மேலேட்டமாகப் பார்வையினைச் செலுத்தும்போது மிகவும் வருந்தத்தக்கவிதத்திலே காணக்கிடப்பது என்னவென்றால் அநேகமான மோதுகை முகாமைத்துவ அணுகுமுறைகள் அல்லது உத்திகள் இவ்வாறான ஒரு பரந்த அல்லது வெளிப்படையான மோதுகைபற்றிய கோட்பாட்டுரீதியிலான எண்ணக்கருவினை அடிப்படிடையாகக் கொண்டிருக்கவில்லை என்பதாகும் (பார்க்க ஸ்கிமெக்கா 1993 ப.211 221). பொதுவாக, இத்துறையானது ஷஷகுறிப்பிடத்தக்க அளவிற்கு விஞ்சிய கோட்பாட்டு உருவாக்கத்தினை” கொண்டிருப்பது போலத் தோன்றுகின்றது (வோல் மற்றும் லில் 19993 ப.182). இதன் பிரகாரம் ஷஷஎப்பொழுது (யார்) ஏன் மோதுகை இடையீட்டு உத்திகளைப் பயன்படுத்துவது என்பதற்கு உண்மையான கோட்பாட்டு ரீதியிலான நியாயவிளக்கம்

இல்லை'' என்று ஸ்கிமெக்கா வலியுறுத்துகின்றார் (ஸ்கிமெக்கா அதே இடம் ப. 217). அதிகமான ஆராய்ச்சிகள் முறைமையான கோட்பாடுகளினால் வழிநடத்தப்பட்டிருக்கவில்லை என்பது ஆச்சரியத்திற்குரிய விடயம் அல்ல (ஸ்ரெட்மன் 1991 மற்றும் பிரின்சென் 1992 ஆகியோரின், யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, கோட்பாடுகளினால் நடத்தப்பட்ட (ஒப்பீடு) விடய ஆய்வுகள் விதிவிலக்காக இருக்கலாம்). இக்காரணத்தினால்தான் ஸ்கிமெக்கா வெபரின் சமூகவியலில் இருந்து பெறப்பட்ட ஒரு கோட்பாட்டுரீதியிலான கட்டுககோப்பினை நிறுவுவதற்கான கோரிக்கையை விடுக்கின்றார் (வெபர் 1948). வெபரின் மோதுகைக் கோட்பாடானது மோதுகை முகாமைத்துவத்திற்கான பல்வேறுவிதான அணுகுமுறைகளின் நடைமுறை மற்றும் கோட்பாடு ஆகிய இரண்டையும் தன்னகத்தே வைத்திருப்பதற்குப் பயன்படத்தக்க தனியான ஒரு முக்கியமான கட்டுக்கோப்பினை வழங்குகின்றது என அவர் வாதிடுகின்றார். அதேவேளை, பல கல்விப்புலமையாளர்கள் (மற்றும் செயற்பாட்டாளர்கள்) ஸ்கிமெக்கா வெபரின் சமூகவியலிலேயே பிரத்தியேகமாகத் தங்கியிருப்பதற்கு சவால்விடுக்கக்கூடும். மோதுகை முகாமைத்துவத் துறையின் கோட்பாட்டுரீதியிலான குறைபாடுகள் மற்றும் அதனிடம் மோதுகைகுறித்த வெளிப்படையான கோட்பாடு எதுவும் இல்லாமை தொடர்பாக ஸ்கிமெக்கா முக்கியமான வினாக்களை எழுப்புகின்றார்.

இங்கே அடிப்படையாக கவனத்தில்கொள்ளத் தோன்றுவது என்னவென்றால் மோதுகை முகாமைத்துவத்தின் கோட்பாடு மற்றும் நடைமுறைகளின் ஊகிக்கப்பட்ட யதார்த்தங்களில் அதிகமானவை உண்மையிலேயே மோதுகையின் தெளிவற்ற கோட்பாட்டுரீதியிலான கட்டுக்கோப்பினால் திணிக்கப்பட்டவை என்பதாகும் (மோதுகையின் அகவயநிலையாளர் மற்றும் புறவயநிலையாளர் விளக்கம் பற்றிய முன்னைய கலந்துரையாடல் போன்றவை). இன்னும் மேலே கூறுவதாயின், கோட்பாட்டின் பாத்திரம்பற்றிய விளக்கம் மட்டுப்பட்டதாக இருக்கும்போதுகூட அவை செயற்படுவதுபோல் தோன்றுகின்றது. வழக்கமாக மோதுகை முகாமைத்துவத்தில் காணப்படும் கோட்பாட்டின் அர்த்தப்படுத்தலானது அவதானிக்கக் கூடியவற்றின் அல்லது தனிப்பட்ட அனுபவத்தின் சிலவகை விளக்கங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவை காரணம்சார் தர்க்கவியலுடன் வாதப்போக்குடனேயே நோக்கப்பட்டு, பின்னர் கொள்கை விதந்துரைப்புக்கள் இடம்பெறுகின்றன. ஒரு கோட்பாட்டின் இறுதிப்பரீட்சையானது அதன் பயன்பாட்டின் அளவும், அதன் தொழில்நுட்ப பிரயோகத்தன்மையும் ஆகும். அதாவது, கோட்பாடானது வன்முறைமிகு மோதுகையை முடிவுறுத்துவதுபோன்ற எதிர்பார்க்கும் முடிவுகளைநோக்கி கொள்கைகளை வழிநடத்திச் செல்லவும், திசைமுகப்படுத்தவும் முயலும்போதே இவை துலாம்பரமாகின்றன. கவனம் மோதுகை முகாமைத்துவ நடவடிக்கைகளில் இருக்கவேண்டுமானால் (அதுவே வெளியில் உள்ள உண்மையான உலகம்), கல்விப்புலமையாளர்கள், செயற்பாட்டாளர்கள் கோட்பாடுகளைப்பற்றிக் கரிசைனைகொள்ளத் தேவையில்லையென ஒருவர் வாதிடலாமா? ஏனைய அனைத்துக்கும் அப்பால், அதிகமான மோதுகை முகாமைத்துவ ஆராய்ச்சிகள் கோட்பாட்டின் விளக்க அடிப்படையில் அணுகிப் பணியாற்றுவதுபோல் தெரிகின்றபோது, இவ்வழியிலான சிந்தனைகள் மோதுகை முகாமைத்துறையில் கோட்பாட்டின் பொதுவான இடம்பற்றிய வரையறுக்கப்பட்ட விளக்கத்தையே வெளிப்படுத்துகின்றன. எனவே, கோட்பாடானது கல்விப்புலமையாளர்களும், செயற்பாட்டாளர்களும் உண்மையான உலகத்தினை மிகச்சரியாகப் பகுப்பாய்வுசெய்து விபரிப்பதை (சிலவேளைகளில் முன்கூறுவது) இயலுமாக்கும்வகையில் முதலில் ஒரு கட்டுக்கோப்பினை வழங்குதல்வேண்டும். மோதுகை முகாமைத்துவத்தில் ஊகிக்கப்பட்டுள்ள இந்த உண்மை உலகமானது மோதும் தரப்பினர், மூன்றாம் தரப்புப் பண்புகள், வளங்கள், பலவந்தம், நிபுணத்துவம், வெகுமதி போன்ற உத்திகள் என்பனவற்றைக்கொண்ட இடையீட்டு மாறிகளின் நடத்தைகளைக் கொண்டிருப்பதுடன், அவற்றினால் கட்டுப்பட்டும் உள்ளது (பார்க்க பேர்கோவிச் 1992 ப.1021). கோட்பாடானது இவ்வழியிலே விளங்கிக்கொள்ளப்படுமானால் கோட்பாடு ஆராய்ச்சி நடைமுறை வளையத்தினை மோதுகை முகாமைத்துறையானது அணுகக்கூடிய ஆகக்குறைந்தது நான்கு வித்தியாசமான பாதைகளை ஒருவரால் அடையாளங்காணமுடியும் (பிர் 1997 டி ப.263).

ஸ்ரெட்மன் (1991) பெர்கோவிச் மற்றும் ரூபின் (1992) ரூபின் (1981) பிரின்சென் (1992)

சார்ட்மன் (1985) மற்றும் ஜப்ரி (1990) போன்ற சில பகுப்பாய்வாளர்கள் ஒன்றில் தோல்வியுற்றது அல்லது வெற்றிபெற்றது என்பதாகப் புரிந்துகொள்ளப்படும் மோதுகை முகாமைத்துவ நடைமுறையில் ஒப்பீட்டுரீதியான விபரங்களுக்கான மற்றும் அனுபவ அடிப்படையிலான விடய ஆய்வு ஆவணப்படுத்தல்களை வழங்கியுள்ளனர் (மேலும் பார்க்க பேச்சுவார்த்தை ஏடு மற்றும் சர்வதேச பேசச்வார்த்தையின் அனேகமான இதழ்கள்). முறைமையான கோட்பாட்டால் வழிநடத்தப்படுகின்ற ஒப்பீடுசார்ந்த விடய ஆய்வுகள் நியமங்களைவிட அதிகமாக விதிவிலக்குப்போலவே தோற்றமளிக்கின்றன.

ஏனைய சந்தர்ப்பங்களிலே பெர்கோவிச் மற்றும் வெல்ஸ் (1993) மற்றும் நிக்கல்சன் (1992) போன்ற கல்விப்புலமையாளர்கள் பயனுறுதிமிகும் மோதுகை முகாமையானது எவற்றைக்கொண்டு ஆக்கப்பட்டுள்ளது என்பதைப்பற்றிய ஒழுங்குமுறைமைகள், இடைத்தொடர்புகள் அல்லது காரணத்தொடர்பு விளக்கங்களை கூடக் கண்டுபிடித்து, அவற்றை விருத்திசெய்வதை நோக்காகக்கொண்டுள்ளனர். அவர்கள் உதாரணமாக, இணக்கப்பாட்டின் சூழமைவுசார் மாறிகள்பற்றிய புனைவுகோளினைப் பரிசீலிக்கவும், ஆக்கவும், அளவு சார்ந்த முறைகளைப் பயன்படுத்தி, தொகுப்பாய்வுமுறையில் கோட்பாடுகளை உருவாக்குகின்றனர். இவை, தரப்பினரின் தன்மை அல்லது இணக்கப்பாட்டாளர் அடையாளம் மற்றும் தரம் என்பவற்றைப்பற்றி அக்கறைகொண்டதாக இருக்கலாம். இவ்வகையான ஆராய்ச்சிகள் செயல்திறன்மிகு மோதுகை முகாமைமீது பெரிய அளவில் முறைமைவாய்ந்த ஆய்வுகளின் வடிவத்தினை எடுக்கும். இவ்வாறானவற்றை பெர்கோவிச்சில் காணலாம். அல்லது இவ்வகையான ஆய்வுகள் ரூபின் (1980) முயற்சித்ததைப்போல் மூன்றாம் தரப்பு இடையீடுகளுக்கு அதிகளவிலான பரிசோதனை மற்றும் ஆய்வுகூட அடிப்படையிலமைந்த அணுகுமுறைகளைக் கொண்டிருக்கும். பெரிய அளவில் அமைந்த முறைமைவாய்ந்த ஆய்வுகள் அரசியல் தீர்மானம் மேற்கொள்பவர்களுக்காக அவை உருவாக்குகின்ற கொள்கை தொடர்பான கண்டுபிடிப்புக்களுக்காக குறிப்பாகக் கவனமாகப் பின்பற்றப்படுகின்றன (பெர்கொவிச் (1997).

பி'ர் மற்றும் யூரி (1981) மற்றும் பேர்ட்டன் விசேடமாக அவரின் ஆரம்பப் பணிகளில் (1969) போன்ற கல்விப்புலமையாளர்கள் இயல்பிலேயே அனுபவ அறிவினை குறைவாகப் பயன்படுத்துவோராக இருக்கின்றனர். மாறாக, விபரிப்புமிகு சிலவேளைகளில் சுவாரசியமான சொந்த அனுபவம் மற்றும் விதிமுறைக் கட்டுப்பாட்டு வடிவங்களைப் பயன்படுத்துவோராகவும் இருக்கின்றனர். இந்த அணுகுமுறையானது தொகுப்பாய்வு முறைசார்ந்த கோட்பாடாக்கலில் ஒன்று ஆகும். அதன் அதிகமான பற்றாளர்கள் "...தனிப்பட்ட செயற்பாட்டாளர்களின் தனிமனப் போக்கு நிபுணத்துவத்தில் தங்கியுள்ள பல செயல்முறைகளை வழங்குகின்றனர்" (ஸ்கிமெக்கா அதே நூல் ப.214). இவற்றில் அதிகமானவை சில இடையீட்டுக்கான விதிமுறைக்கட்டுப்பாட்டு வழிகாட்டுதல்களுடன்கூடிய நடைமுறையின் மையவாக்கக் கூறுகளின் தொகுப்பாய்வுமுறைக்குரிய வித்துரைகளாக இருக்கும் நிலையான மாதிரிகளில் தங்கியிருப்பவையாக மாறிவிடும் (பி'ர் 1997). ஹாவார்ட் பேச்சுவார்த்தை கருத்திட்டப்பணி மிகவும் வெளிப்படையாகத் தெரியும் உதாரணமாக அமையக்கூடும். ஆராய்ச்சி என்பது ஒரு சான்றாகவே காட்டப்படுகின்றது. ஆனால், அது பிரதானமாகக் கூறப்படாத ஊகங்கள், கருத்துக்கள் மற்றும் அவ்வேளைக்குரிய அவதானிப்புக்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டதாக மாறிவிடுகின்றது (கிளேபோவர் 1996 ப.376) என்பதை கிளெபோவர் வலியுறுத்தும் போது மோதுகை முகாமைத்துறையிலே அனுபவத்தினால் அறியப்படுகின்ற சான்று மற்றும் ஊடகம் என்பவற்றுக்கிடையில் காணப்படுகின்ற நுண்ணிய கோட்டினையே அவர் குறிப்பிடுகின்றார். உண்மையிலேயே, பி'ர் மற்றும் யூரி (1981) யூரி (1991) மற்றும் பேர்ட்டன் (1987) ஆகியோரின் ஆராய்ச்சி முடிவுகளில் அதிகமானவை கைநூல்கள், கையேடுகள் அல்லது சமயநூல்கள் என்பவற்றின் வடிவிலே வருவதுடன், அவை வெற்றிகரமான மோதுகை முகாமைத்துவ அப்பியாசங்களுக்கான விதிகளை அல்லது அறிவுறுத்தல்களை வழங்குகின்றன (பார்க்க மிச்செல் 1993).

பேர்ட்டனினாலும், ஏனையவர்களினாலும் அறிமுகப்படுத்தப்பட்ட பிரச்சினைதீர்க்கும்

செயலமர்வுகளின் பயிற்சிகள் மோதுகை மற்றும் மோதுகைத் தீர்வுச் செயல்முறைகள்மீதான கருத்துக்கள் மற்றும் புனைகோள்களை தொகுப்பாய்வு முறையில் கோட்பாடாக்குவதற்கான வாய்ப்புக்களாகக் கருதப்படுகின்றதா (உதாரணத்திற்கு பார்க்க பி'ர் 1997 டி ப.256 1982) அல்லது அவை மாறாக, உண்மையின் ஒளியில் விடயங்களைப் பார்ப்பதன்விளைவாக, அதாவது மோதுகையையும், மோதுகைத் தீர்வையும் பொதுமைப்படுத்தி அதிலிருந்து மனிதத் தேவைகள்பற்றி மிகவும் பொதுவான கோட்பாட்டினைப் பெறுவதா என்பதுபற்றிச் சில குழப்பங்கள் இருப்பதுபோலத்தெரிகின்றது (உதாரணத்திற்கு பார்க்க பெதர்ஸ்டோன் 1991). அதிகமான மோதுகைத்தீர்வு விடயவிதானங்களில் உள்ளார்ந்த தன்மையாகக் கணப்படுகின்ற தெளிவற்ற தன்மையும், தெளிவான முன்னுக்குப்பின் முரணான விடயங்களும், பேர்ட்டனின் பணிகளில் காணக்கூடிய பொதுவான இருபொருள் தொனிக்கும் தன்மை மற்றும் வரைவிலக்கனணத்தில் துல்லியமற்ற தன்மைகளுடன் ஒத்ததாகும். அல்லது அவரின் விளக்கமற்ற ஆக்கங்களை தெரிவுசெய்து வாசிப்பதன்விளைவாக ஏற்படும் பொதுமைப்படுத்தல்களிலும் இவற்றைக்காணலாம். இருப்பினும், பேர்ட்டன் (1969) (1972) மற்றும் பி'ர் (1983) ஆகியோரால் முன்மொழியப்பட்டவாறாக, பிரச்சினை தீர்க்கும் செயலமர்வுப்பயிற்சிகளின் பல்வேறு வடிவங்களை ஆராயும்போது, அவை அதிகம் பொதுவான ஆயினும் அதே அளவிற்குப் பாரதூரமான ஒரு பிரச்சினையை வெளிப்படுத்துகின்றன. இச்செயலமர்வுகள்குறித்த அதிகமான ஆராய்ச்சியாளர்கள் புனைவுக் கொள்கைகளைச் சமகாலத்திலே உண்மையின் ஒளியிலும், பகுப்பாய்வுமுறையிலும் பார்ப்பதுபோல் தெரிகின்றது.

பிரச்சினைதீர்க்கும் செயலமர்வுகளைக் கோட்பாடுகளை உருவாக்குவதற்கான வாய்ப்பாகக்கருதும் சிலர் கல்விப்புலமையாளர்கள் மத்தியில் தொடக்கத்தில் காணப்பட்ட ஆர்வமானது கோட்பாடுகளின் ஒழுங்குமுறையான பரிசீலனைக்கு உண்மையில் ஒருபோதும் இட்டுச்செல்லவில்லை கட்டியெழுப்பப்பட்டிருக்கின்ற கோட்பாட்டுரீதியிலான தளங்கள் தெளிவாக்கப்படவில்லை (பொல்ஜெர் 1999) எனவும் வலியுறுத்திக் கூறுகின்றனர். நாங்கள் மோதுகை முகாமைத்துவம் என்னும் கட்டுமானத்தை அசைப்பதற்கு துணிவுகொள்ளவேண்டும். அனைத்துக்கும் மேலாக, அனைத்துப் பகுப்பாய்வுகளுக்கும் தகவலளிக்கின்ற ஆனால் அது எதுவென்று கூறப்படாத அல்லது கேள்விகளுக்கே உட்படுத்தப்படாத அந்த, புனிதமானவையும், மௌனமானவையுமான பெறுமானங்கள்தாம் யாவை?

இவ்வாறான புனிதமான பெறுமானத்துக்கான ஒரு சிறந்த உதாரணத்தை பால்நிலை விடயத்தில் காணக்கூடும். மோதுகை முகாமைத்துறையிலே இருக்கின்ற தனிப்பட்ட நபரிடம் நமக்குப் பெரிதும் வெளிப்படையற்றதாகவுள்ள படிமம் யாது? நாம் அவரை அறிவார்ந்தவராகவும், அதேவேளையில் பிறர் நிலை உணர்பவராகவும், ஒத்துழைப்புமிக்கவராகவும், பால்நிலை நடுநிலைமை மிக்கவராகவும் நோக்குகின்றோமா? வேறு அனைத்தையும் விட, மோதுகை முகாமைக் கல்விப்புலமையாளர்கள் மோதுகை முகாமைக் கோட்பாட்டினையும், செயல்முறைகளையும் ஒரு பால்நிலை - நடுநிலைவாய்ந்த பரப்பாகச்சித்தரித்துக் காட்டுவதற்காக நன்கு விமர்சிக்கப்படலாம். யுத்தகாலத்திலும், சமாதான காலத்திலும் மோதுகை முகாமைத்துவமானது சமூகத்திலேயுள்ள ஆண்களினதும், பெண்களினதும் நிலைப்பாடுகளிலோ அல்லது பாத்திரங்களிலோ அறியக்கூடியதான விளைவுகளைக் கொண்டிருக்கவில்லை என்பதே இக்கல்விப் புலமையாளர்களின் தொழிற்படும் ஊகமாக எப்போதும் இருந்துவந்துள்ளது. விசேடமாக, பெண்கள் மற்றும் மதிப்பிறக்கப்பட்ட ஆடவர் (வெள்ளைத் தோல் இல்லாதவர்கள், மேலைத்தேய மயமாகாதவர்கள், உழைக்கும் வர்க்கத்தினர் அல்லது தன்னினப் புணர்ச்சியாளர்கள்) ஆகியோரைப் பற்றிய அக்கறைகள் அவர்களின் சமூகநலன்கள் எண்ணங்கள் மற்றும் அனுபவங்கள் போன்றன நீடித்த மோதுகையின் முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வு என்பவற்றினால் மிகவும் சாதாரணமாகக் கைவிட்டுச்செல்லப்பட்டுள்ளன (பார்க்க ரெயிமான் 2001). மோதுகை முகாமைத்துவ விடய விதானங்களின்மீதான மேலோட்டமான பார்வை, எண்ணக்கரு மற்றும் மேலும் விசேடமாக நடைமுறை மட்டத்திலான மோதுகை முகாமைத்துவமானது தொடர்ந்தும் ஓர் ஆடவர் உலகமாகவே இருந்துவருகின்றது என்பதை விரைவாக உணர்த்திவரும் உள்நாட்டு மற்றும்

உளளூர் மோதுகைப்பணிகளில் ஈடுபட்டிருப்போருக்கு மாற்றாக, சர்வதேச பரப்பினிலே மோதுகை முகாமைத்துவத்தில் ஈடுபட்டிருக்கும் அனேகமான செயல்பாட்டாளர்களும் கல்விப்புலமையாளர்களும் இதுவரை ஆண்களாகவேயுள்ளனர்.

மோதுகை முகாமைத்துறையானது அதிகமான ஆணாதிக்க சமூகங்களில் காணப்படுகின்ற விலக்கி வைக்கின்ற தன்மைமிகுந்த அதிகாரக்கட்டமைப்புகளையும், அதிகாரப்படிநிலை அமைப்புகளையும் உண்மையிலேயே நீடித்திருக்கச்செய்வதுடன், அவற்றை மறைமுகமாக்கவும் செய்கின்றது என பெண்ணியல்வாதிகள் வாதிடலாம். பால்நிலைசமத்துவமின்மை போன்ற காரணிகளால் எழுகின்ற சமூக முரண்பாடுகளை அதிகமான மூன்றாந்தரப்பு தலையீடுகள் குறைக்கத் தலைப்படுகின்றன, அல்லது அடக்குவதற்குத் தலைப்படுகின்றன என்பது தெளிவாகும். இந்தக்கருதியலிலிருந்து ஒருவர் ஆட்டின் உடையில் ஓநாயா இருக்கின்றது எனத் தாராளமாகக்கேட்கலாம். மோதுகை முகாமையானது குறியீடுகளை மாற்றுகின்ற அதேவேளை, ஆணாதிக்கத்தின் பழைமையான, கண்ணுக்குப் புலப்படாத கோட்பாடுகளையும், செயற்பாடுகளையும் புதிய முடிவுறுத்தலுக்குப்பிந்திய சமூக ஒழுங்கில் தொடர்ந்தும் ஆதரித்துவருகின்றதா? எனவே, மோதுகை முகாமைத்துவமானது தொடர்ந்தும் முகாமைத்துவத்தின் வாதப்போக்கு மற்றும் செயல்முறை என்பவற்றுள் அமிழ்ந்துகொண்டு, பால்நிலை சமத்துவமின்மைபோன்ற மோதுகை முகாமைத்துவ முன்னெடுப்புகளின் அடிப்படையான அதிகார ஏற்பாடுகளைப் புறக்கணிக்கின்றது.

இது நேரடியாகப் பாரிய வினாக்களுக்கு இட்டுச்செல்கின்றது. மோதுகை முகாமைத்துவமானது பால்நிலை நடுநிலை அற்றது என்றால் மோதுகை முகாமைத்துவ அணுகுமுறைகளிலுள்ள பொதுவான மற்றும் தனிப்பட்ட துறைகள்பற்றிய அதன் மறைவான விளக்கம் என்ன? கருத்துப் புறவுருக்கொண்ட, பால்நிலைப்பட்ட இணக்குவிப்பாளர் அல்லது மோதுகை முகாமைத்துவ கல்விப்புலமையாளர் என்பதன் கருத்து யாது? அதாவது மோதுகை முகாமைத்துவச் செயற்பாடு ஓர் ஆணை அல்லது பெண்ணை எவ்வாறு வரைவிலக்கணம் செய்கின்றது? மாறாக, மோதுகை முகாமைத்துவ கோட்பாடுகளிலும், செயற்பாடுகளிலும் ஆண்பாற்தன்மை மற்றும் பெண்பாற் தன்மையின் அடிப்படையான விளக்கமென்ன?

அனேகமான மோதுகை முகாமைத்துவ அணுகுமுறைகள் அடையாளம்பற்றிய ஓரளவுக்கு நிலையான மற்றும் எளிமையான எண்ணப்போக்குகளிலிருந்தே செயற்படுகின்றனவென்பதைப் பகுப்பாய்வுகள் காட்டுகின்றன. போர்ட்டனும், அஸாரும் மற்றும் ஏனையோரும் நீடித்த அல்லது எளிதில் தீர்க்கமுடியாத சமூகமோதுகைகளின் ஆய்வில் அடையாளக்குழுவைப் பகுப்பாய்வின் மிகவும் பொருத்தமான அலகாகக்கருதிய போதிலும், கூட, அவர்களின் பணியானது குறைபாடு மிக்கதாகவும் மற்றும் அடையாளங்கள் மாறுகின்ற அத்துடன் கட்டியெழுப்பப்படுகின்ற, செழுமையான பல்வேறுவிதமான வழிகளைப் போதுமான அளவுக்கு பதிவுசெய்யத் தவறிவிட்டதாகவுமே காணப்படுகின்றது. ஆண்பாற்தன்மை மற்றும் பெண்பாற்தன்மை என்னும் எண்ணப்போக்குகள், மேலும் அதிகமான மோதுகைகளில் உள்ள வன்முறை அல்லது சமாதானம் என்பவற்றுடனான அவற்றின் தொடர்புகள் ஆகியன நெகிழ்வுடையன என்பதையும், அவற்றக்குத் தொடர்ச்சியான மீள்வரைவிலக்கணப்படுத்தலும், கவனமான கையாளுகையும் தேவையென்பதையும் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.

பெருமளவில் கல்விப்புலமையாளர்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் சொல்லப்படாததும், மறைவானதுமான பெறுமானங்களே மோதுகை முகாமைத்துவத்துள் வெற்றியை வரையறைசெய்ய உதவுகின்றன என்பதை இந்த வினாக்கள் கோடிட்டுக்காட்டுகின்றன. இவ்வாறு நோக்குகையில், உதாரணமாக, மோதுகை முகாமையின் பயனுறுதிமிகு விளைவின் எண்ணக்கரு ஒரு புறவயமான விபரிப்பு என்பதைவிட ஓர் உயர் அகவயமான விழுமிய நிர்மாணம் போலவே தோன்றுகின்றது. ஒரு மோதுகை முகாமைத்துவ முயற்சியினை வெற்றிகரமான ஒன்று என முத்திரைகுத்துவது என்பதே ஒரு பெறுமானத் தீர்ப்பினை ஏற்படுத்துவதாகும்.

சமாதானம் மற்றும் மோதுகையின் தாக்கமதிப்பீடு ஒன்று (ரீஊஜஐயு) பற்றித் தற்போது

இடம்பெற்றுவரும் கலந்துரையாடல்களினால் எவ்வளவு தூரத்துக்கு மோதுகை முகாமைத்துவ முயற்சிகளின் வெற்றியினை ஒழுங்குமுறையாக வகைப்படுத்துவதற்கும், மதிப்பிடுவதற்குமான கருத்தியல்ரீதியிலான, கட்டுக்கோப்புவடிவில் அமைந்த சில பரிகாரங்களை வழங்கமுடியும் என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (இப்பாகத்திலுள்ள மார்க் ஹொப்மனின் பங்களிப்பைப் பார்க்கவும்) மதிப்பீட்டுப் படிவங்களிலே வெற்றிக்கான தேர்வுமுறைக்கான அதிகம் பிரபலமாகிவரும் சிறிய நேர்த்தியான சதுரங்கள் முடிவிலே கோட்பாட்டுப்பஞ்சத்திலிருக்கும் சமுத்திரங்களில் விழும் வெறும் துளிகள்தானாவென்று விமர்சகர்கள் வினவலாம்.

அடிக்குறிப்பு

- PCIA சமாதானம் மற்றும் மோதுகையின் தாக்கமதிப்பீடு
  (Peace and conflict Impact Assessment)

அதிகமான குழுமங்களுக்கிடையிலான மோதுகைகளில் உள்ளார்ந்ததாக இருக்கின்ற எதிர்பார்த்திருக்காத உயர்சிக்கலும், இயக்கவியலும் சார்ந்த மோதுகைபின்னிய செயல்விளைவான முழுத்தோற்றத்திற்கும் எனது பார்வையில் தன்னிச்சையாக தனிமைப்படுத்தப்பட்ட, நிலையானதாகத் தோன்றுகின்ற மோதுகைச் சுட்டிகளினால் எந்த அளவுக்கு நுண்ணறிவை சேர்க்க முடியும் என்றும் ஒருவர் மேலும் வினாவெழுப்பலாம். உதாரணமாக, பெண்களின் மாறுகின்றதும், சிக்கலானதுமான அடையாளத்தையும், முகவராண்மைகளையும் வெற்றிக்குள் அல்லது மோதுகையான சுட்டிக்குள் பொருந்தச்செய்வதற்காக எவ்வாறு ஒருவர் நெகிழ்வுத் தன்மையினைக் கையாளலாம்?

அநேகமான பெண்கள் அரசுகளுக்குள் இடம்பெறும் மோதுகைகளை ஒரு நிச்சயமற்ற வழியிலே அனுபவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. முன்பு ஆண்களின் ஆதிக்கத்துள்ளிருந்த பொதுவான மற்றும் தனிப்பட்ட விடயப்பரப்புகளின் வெற்றிகரமான பாத்திரங்களை பொறுப்பேற்கலாமெனப் பெண்கள் அறிந்துகொள்கின்றனர். சில வன்செயல்மிகு மோதுகைகள் உண்மையிலேயே பெண்களின் வலுப்படுத்தலுக்கான இடைநிலை ஊக்கிகளைப் பிரதிநிதித்துவம்செய்யலாம். இருப்பினும், அதிகமான மோதுகைகள் பெண்களுக்குப் படுமோசமான அட்டூழியங்கள் மற்றும் பாலியல் வன்முறைகள், பாலியல் வல்லுறவுகள் மற்றும் நிர்ப்பந்திக்கப்பட்ட விலைமகள் நிலைமை போன்ற பாரியளவிலான மனித உரிமை மீறல்களைத் குறிக்கும் அழிவுதரும் அனுபவங்களாகத் தொடர்ந்தும் இருந்துவருகின்றன. எனவே, வன்செயல் மோதுகையிலே பெண்களின் முகவராண்மைச் செயல்முறையின் முகாமைத்துவத்தைப்பற்றியும் பேசுகின்ற அதே வேளை, ஒரு புறத்திலே பாதிப்புக்குள்ளாகக்கூடிய நிலை மற்றும் பாதிப்புநிலை என்பவற்றுக்கிடையில் காணப்படுகின்ற சௌகர்யமற்ற பதட்டத்தினையும், மறுபுறத்திலே வலுப்படுத்தலையும், மீட்சியினையும் ஒருவர் மனதிலே தொடர்ந்து இருத்திக்கொள்ளவேண்டும். அவர் எப்பொழுதும் ஒன்றை மற்றொன்றை விடவும் முன்னுரிமைப்படுத்தல் தூண்டுதலை எதிர்க்கவேண்டும் (பார்க்க ரெய்மான் 2001).

மேலும், பொதுவாக வகைப்படுத்தப்பட்ட, பல்வேறுபட்ட பல்லினத்தன்மைமிக்க மோதுகைச் சுட்டிகளை ஒருவர் வைத்துக்கொண்டிருந்தாலும் முறைமைவழியிலான சமூகங்களின் உள்ளேயான வன்முறைகளின் இயக்கவியலுக்கான திருப்திகரமான விளக்கத்தினை இன்னும் காணமுடியாத ஒரு நிலையைக் காணமுடியும். அவ்வாறாயின் ˚ஊஜயு இன் அரசியல் மற்றும் நெறிசார் தாற்பரியங்கள் யாவை? அதிகமான ˚ஊஜயு க்கான அதன் பெறுபேறுகளை எவ்வாறு கையாளுவது என்பதுபற்றிய வரையறுக்கப்பட்ட அரசியல் மற்றும் நெறிசார் வழிகாட்டுதல்களை மட்டுமே வழங்குகின்றன என்பதாகவே தோன்றுகின்றது. இன்றுவரை முன்மொழியப்பட்டுள்ள அதிகமான வெற்றி அல்லது மோதுகைச் :சுட்டிகள் ஒரு அமைதியான, நீதியான சமூகத்தின் பரந்த கோட்பாட்டுரீதியிலான கட்டுக்கோப்பில் அமையாத காரணத்தினால் இது ஒன்றும் ஆச்சரியத்துக்குரிய விடயமன்று. ˚ஊஜயு யானது அபிவிருத்தி

ஒத்துழைப்புக் கருத்திட்டங்களின் பொருளாதார வினைத்திறனுக்கு அனுகூலமாகத் தோன்றுகின்ற அதேவேளையில், சமாதான உருவாக்க முயற்சிகளை அது வெற்றி அல்லது தோல்வி என முத்திரைகுத்த முயற்சிப்பதனால் நெறிசார்ந்த மற்றும் அரசியல் சார்ந்த நீரினுள் துணிந்து இறங்குவதற்கு இதுவரையில் தயாரில்லாத நிலையிலேயே இருந்துவருகின்றது.

பிரச்சினைதீர்க்கும் அணுகுமுறைகளின் குறைபாடுகளை எடுத்துக்கொண்டு அவற்றினைப்பற்றி ஓரளவுக்குப் பேசத்துணிந்த இத்துறையிலுள்ள சிலரில் பேர்ட்டனும் ஒருவராவார். ("புதிர்" அவிழ்க்கும் அணுகுமுறைகளுக்குப் பதிலாக) பேர்ட்டன் பேசுகின்றார். பேர்ட்டனின் அணுகுமுறைக்கு ஏற்ப "தீர்வு என்பது இறுதியான உற்பத்திப் பொருளன்று தன்னளவில் தனக்கேயுரிய தொகுதிப் பிரச்சினைகளைக் கொண்டுள்ள இன்னுமொரு தொகுதி உறவுகளாகும்".

பிரச்சினை தீர்த்தலானது அறிவு அல்லது உத்திகளின் புதிய கூட்டிணைப்பு மற்றும் கோட்பாட்டுரீதியான கட்டமைப்புக்களில் ஒரு மாற்றம் என்பவற்றினை அடிக்கடி அவாவி நிற்கின்றது. பின்னிய செயல்களின் முறைமை திறந்த நிலையிலுள்ள ஒன்றாகும், அதாவது, பகுதிகள் வெறுமனே அவற்றுக்கு மத்தியில் பின்னிய செயல்களுக்கு உட்பட்டவையல்ல. ஆனால், எந்தவிதக் கட்டுப்பாடும் இருக்கமுடியாத, பரந்த சூழலிலே பின்னிய செயல்நிலைக்கு உட்பட்டவையாகும் (பேர்ட்டன் 1979 4.5).

இந்த அணுகுமுறையானது விமர்சனக்கோட்பாட்டில் ஒரு முதல்தோற்ற முயற்சி இணைப்பைக் கொண்டுள்ளது. இது கோட்பாட்டு வரன்முறை விமர்சனம்குறித்த ஒரு முயற்சியாகும். பேர்ட்டன் போலவே விமர்சனக் கோட்பாடானது "சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்ற, வலுப்படுத்தப்பட்ட சமூக வாழ்க்கையினை கேள்விக்குள்ளாக்குவதன்மூலம் பிரச்சினைதீர்க்கும் அணுகுமுறைகளின் பாரம்பரிய வடிவங்களுக்கு சவால்விடுப்பதிலும், அவற்றை அகற்றுவதிலும் கவனத்தைச் செலுத்துகின்றது" (டெவட்டாக் 1996, ப.148).

பேர்ட்டனுக்கு இருந்ததைப் போலவே, இங்கேயும் ஆரம்பப்புள்ளி நிறுவனங்கள் மற்றும் சமூகத்தொடர்புகளில் எந்த ஒரு குறிப்பிட்ட சட்டகத்தினதும் மூலத்தின் பிரச்சினை மயமாக்கலாகும். மேலும் பேர்ட்டனின் பிரச்சினையைத் தீர்க்கும் அணுகுமுறையைப்போலவே, விமர்சனக்கோட்பாடும் சமூகமாற்றத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் ஆதிக்கமிகு சமூக மற்றும் அரசியல் முறைமையினை நிலைமாற்றுவதற்கு சாத்தியமான வழிகளைத் தெளிவுபடுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது (பார்க்க கொக்ஸ் 1981 ப.129 130).

இன்னுமொரு சுவாரசியமான கேள்வி என்னவெனில் பேர்ட்டனின் பிரச்சினைதீர்க்கும் செயலமர்வானது எவ்வளவுதூரத்துக்கு ஹேபர்மாசின் கருத்தியலான பேச்சுச்சூழலினைப் பிரதிபலிக்கின்றது என்பதாகும்.

ஹேபர்மாசின் இலட்சியப் பேச்சுச்சூழலிற்கு அமைய அனைத்து பங்கேற்போரும் பற்கேற்பதற்கும், வினாக்களை எழுப்புவதற்கும் சமமான வாய்ப்புகளைக் கொண்டுள்ளனர். இறுதியாக பேர்ட்டன் போலவே அறிவு என்பது உறுதியான வரலாற்றுரீதியான நிலைமையின் வெறும் பிரதிபலிப்பல்ல, ஆனால் அது சமூகமாற்றத்தினை உருவாக்குவதற்கான ஒரு சமூகபலம் என்பதாகப் புரிந்து கொள்ளப்படல் வேண்டும் என ஹோர்க்ஹெய்மர் வலியுறுத்துகின்றார் (பார்க்க ஹோர்க்ஹெய்மர் 1972 ப 215). இருப்பினும், பேர்ட்டனின் புலன்நிகழ்வுக் கொள்கை எதிர்ப்புவாதமானது ஏதோ ஒருவழியில் அவரின் மோதுகையின் விஞ்ஞானரீதியான ஆய்வுக்கான சாதகமான அணுகுமுறைமீதான பரந்த வலியுறுத்தலுடன் மோதுகின்றது. பேர்ட்டனின் அனேகமான பணிகள் பொதுவில் சமூக ஒழுங்கின் சித்தாந்தரீதியற்ற மாதிரி மற்றும் குறிப்பாக புறவயமான மனிதத்தேவைகள்குறித்த பெறுமானம்சாரா எண்ணக்கரு என்பவற்றுக்கான அவரின் தேடலை ஏதோ ஒரு வழியில் பிரதிபலிக்கின்றன. வேறுவார்த்தைகளில் கூறுவதாயின், "அகவயத்தன்மையில் இருந்து கோட்பாட்டு அடிப்படையிலான புறவயத்தன்மைக்கு" (பேர்ட்டன் 1993 ப. 57) நகர்வதற்கான

போர்ட்டனின் நம்பிக்கைகள் பொருத்தமற்றவையாக மாறிவிடுகின்றன. ஏனெனில், சமூக உலகின் எந்தவொரு பகுப்பாய்வும் பகுப்பாய்வாளரின் பெறுமானங்களுடன் ஒன்றுகலந்துவிடுகின்றன. எனவே போட்டியிடுகின்ற பெறுமானங்களின் உலகில் எந்தவொரு குறிப்பிட்ட மாதிரியினதும் சிறப்புகள் விளக்கம் தேவையற்றவையாகும். எந்தவொரு மாதிரியும் சித்தாத்தங்களில் இருந்து விடுபடுவதில்லை. ஜோன் போர்ட்டன் உலகத்தை மாற்றவிரும்பியதால் அவருக்கு எந்த மாற்றீடும் இல்லை. எனவே அவர் மாற்றத்துக்கான தனது வாதத்தை சித்தாந்தச் சொற்பதங்களில் முன்வைத்தார். ஒருவரின் பேறுமானங்களுக்கு இயற்கைவிஞ்ஞான ஆடை அணிவிப்பது எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும். சமூக ஒழுங்கின் சித்தாந்தமற்ற மாதிரியானது ஒரு பொருந்தாத கற்பனையாகும். அதை கோருவதும், பின்பற்றுவதும் தவறாகும் (லிட்டில் 1984 ப. 95).

5. தற்போது எழுப்பப்படும் வினாக்களும், விடுக்கப்படும் சவால்களும்

இன்னும் ஆதிக்கத்தில் இருக்கின்ற பேர்ட்டனின் மற்றும் பேர்கோவிட்சினால் முன்வைக்கப்பட்டதுபோல, விஞ்ஞானமுறைகளைக் கோட்பாட்டின்பால் திசைமுகப்பட்ட தீர்ப்புகளுடன் இணைக்க முயலுகின்ற ஆங்கிலேய அமெரிக்க அனுபவப்பயிற்சியாளர் முறைமையியலானது இழப்புபற்றிய மரபுரீதியான விஞ்ஞானக்கோட்பாடுகளிலிருந்து பெரிய அளவில் இரவல் பெறுகின்றவை என்பதை தெளிவாக்குவதையே இந்த அத்தியாயம் நோக்கமாகக் கொண்டிருந்தது. இதன்படி சமூகவிஞ்ஞானத்திலே மிகவும் பரவலாக இருக்கின்ற உண்மைக்கும், பெறுமானத்துக்குமிடையிலான பிரிவானது உள்ளதெனவும், எப்படியோ தவிர்க்க முடியாதது எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மோதுகை முகாமைத்துவத்தின் அதிகமான ஆராய்ச்சிகள் வெளித்தோற்றத்தில் மாற்றமுடியாததுபோல் தெரிகின்ற உண்மைக்கும், பெறுமானங்களுக்கும் இடையிலான இப்பிரிவுக்கு அறைகூவல்விடுக்காமலேயே விட்டுவிடுகின்றன. அதிகமான மோதுகை முகாமைத்துவ ஆராய்ச்சிகளிலே ஏன் இருகூறான சிந்தனைப்போக்கு மிகவும் பரவலாகக் காணப்படுகின்றது என்பதை இது விளக்குகின்றது. முரண்பாட்டு முகாமைத்துவ விடயவிதானத்தின் இச்சுருக்கமான மீளாய்வானது அகவயநிலை மற்றும் புறவயநிலைக்கிடையிலான, முரண்பாட்டு முடிவுறுத்தல் மற்றும் முரண்பாட்டுத்தீர்வு உத்திகளுக்கிடையிலான, மற்றும் பக்கச்சார்பின்மை மற்றும் பக்கச்சார்புக்கிடையிலான சீர்கெட்ட இப்பிளவே அதிகமான ஆராய்ச்சிகளில் துரதிருட்டவசமாக நீண்டகாலமாக அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது (மேலும் பார்க்க பெக்கெட் 1997).

மோதுகை முகாமைத்துவம் மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கம் போன்ற துறைகள் நம்மை சமூக மற்றும் அரசியல் கோட்பாடுகளின் பரந்த விவாதங்களுக்குத் திறந்துவிடுவதற்கான மிகவும் உண்மையான தேவையுள்ளது. பெண்ணியம், விமர்சனக் கோட்பாடு மற்றும் சமூகநிர்மாணவாதம் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட நுண்ணறிவைப் பயன்படுத்தி இருகூறான எண்ணப்போக்கினையும், கோட்பாடுகளையும் இணைப்பதற்கு முயற்சிக்கின்ற அணுகுமுறைகளை விசேடமாக ஒன்றிணைக்க முயலுகின்றது (மோதுகை முகாமைக்கான அதிக பால்நிலைக்கூருணர்வுமிக்க அணுகுமுறையின் வெற்றியின் கலந்துரையாடலுக்காக ரென் 2001 ஐப் பார்க்கவும்). முரண்பாட்டு முகாமைத்துவம் மற்றும் நிலை மாற்றத்துறையின் உள்ளும் வெளியிலுமான மேலதிக கலந்துரையாடல்கள் சமூக மற்றும் அரசியல் கோட்பாடுகளில் உள்ள பரந்த விவாதங்கள் எவ்வளவுதூரத்துக்கு முழுத்துறைக்குமே புரட்சிகரமான பங்களிப்புகளையும், முக்கியமான பிரவேசங்களையும் உருவாக்கத் தொடங்கியுள்ளன என்பதைத் தெளிவாக்கும்.

6. உசாத்துணை மற்றும் மேலும் வாசிப்பதற்கான நூல்கள்

Azar, Edward E. 1990. *The Management of Protracted Social Conflict*, Hampshire: Dartmouth.

Banks, Michael (ed.) 1984. *Conflict in World Society: A New Perspective on International Relations*, Brighton: Wheatsheaf.

Banks, Michael and Christopher R. Mitchell 1991. *A Handbook of the Analytical Problemsolving Approach*, Fairfax, Va: Institute for Conflict Analysis and Resolution.

Beckett, Gavin 1997. "Social Theory and the Theory and Practice of Conflict Resolution.", *in* Broadhead, op.cit., 59–86.

Bennett, D. Scott 1996. "Security, Bargaining and the End of Interstate Rivalry," *International Studies Quarterly*, 40, 2: 157–184.

Bercovitch, Jacob 1992. "The Structure and Diversity of Mediation in International Relations", *in* Bercovitch and Rubin, op. cit., 10–21.

Bercovitch, Jacob 1984. *Social Conflicts and Third Parties: Strategies of Conflict Resolution*, Boulder, Co: Westview.

Bercovitch, Jacob (ed.) 1996. *Resolving International Conflicts: The Theory and Practice of Mediation*, Boulder, Co: Lynne Rienner.

Bercovitch, Jacob 1997. "Mediation in International Conflict," *in* Zartman and Rasmussen, op. cit., 133.

Bercovitch, Jacob and Jeffrey Rubin (eds.) 1992. *Mediation in International Relations. Multiple Approaches to Conflict Management*, London: St. Martin's Press.

Bercovitch, Jacob and R. Wells 1993. "Evaluating Mediation Strategies: A Theoretical and Empirical Analysis", *Peace and Change*, 18, 3–25.

Bloomfield, David 1997. P*eacemaking Strategies in Northern Ireland: Building Complementarity in Conflict Management Theory*, New York: St. Martin's Press.

Bomers, Gerald B.J. and Richard B. Peterson (eds.) 1982. *Conflict Management and Industrial Relations*, Boston, The Hague and London: Kluwer/Nijhoff Publishing.

Brams, S.J. 1990. *Negotiation Games: Applying Game Theory to Bargaining and Arbitration*, New York: Routledge.

Broadhead, Lee-Anne (ed.) 1997. *Issues in Peace Research 1997–98*, Bradford: Department of Peace Studies, University of Bradford.

Burchill, Scott and Andrew Linklater (eds.) 1996. *Theories of International Relations*, London: Macmillan Press.

Burton, John 1968. *Systems, States, Diplomacy and Rules*, Cambridge: Cambridge University Press.

Burton, John 1969. *Conflict and Communication: The Use of Controlled Communication in International Relations*, London: Macmillan.

Burton, John 1972. *World Society*, London: Macmillan.

Burton, John 1979. *Deviance, Terrorism and War: The Process of Solving Unsolved Social and Political Problems*, Oxford: Martin Robertson Press.

Burton, John 1987. *Resolving Deep-Rooted Conflicts: A Handbook*, Lanham, Md: University Press of America.

Burton, John (ed.) 1990. *Conflict: Human Needs Theory*, London: Macmillan.

Burton, John 1993. "Conflict Resolution as a Political Philosophy", *in* Sandole and van der Merwe, op. cit.

Burton, John and Frank Dukes (eds.) 1990. *Conflict: Readings in Management and Resolution*, London: Macmillan.

Bush, R. A. Baruch and Joe Folger 1994. *The Promise of Mediation: Responding to Conflict Through Empowerment and Recognition*, San Francisco: Jossey-Bass.

Charles Stewart Mott Foundation 1999. *Reaching for Peace: Lessons Learned from Mott Foundation´s Conflict Resolution Grantmaking, 1989-1998*, Evaluation conducted by CDR Associates and the Berghof Research Center for Constructive Conflict Management, Flint, Michigan: Charles Stewart Mott Foundation.

Clements, Kevin 1998. "A Field in Tension: From Alternative Dispute Resolution to Conflict

Transformation," *in* Pressis and Fougere, op. cit., 129–148.

Corbin, Jane 1994. *The Norway Channel: The Secret Talks that Led to the Middle East Peace Accord*, New York: Atlantic Monthly Press.

Coser, Lewis A. 1956. *The Functions of Social Conflict*, New York: Free Press.

Cox, Robert W. 1981. "Social Forces, States and World Orders: Beyond International Relations Theory", Millennium, 10, 2, 126–155.

Cox, Robert W. 1983. "Gramsci, Hegemony, and International Relations: An Essay in Method", *Millennium*, 12, 2, 162–175.

Curle, Adam 1971. *Making Peace*, London: Tavistock Publications.

Dahrendorf, Ralf 1957. "Towards a Theory of Social Conflict", *Journal of Conflict Resolution* 2, 2, 170-183.

Dahrendorf, Ralf 1994. *Der moderne soziale Konflikt. Essays zur Politik der Freiheit*, München: DTV.

Devetak, Richard 1996. "Critical Theory," *in* Burchill et. al., op. cit., 210–251.

Diamond, Louise and John McDonald 1996. *Multi-Track Diplomacy: A Systems Approach to Peace*, Washington, DC: Kumarian Press.

European Platform for Conflict Prevention and Transformation 1998. *Prevention and Management of Violent Conflicts. An International Directory*, Utrecht: European Platform for Conflict Prevention and Transformation (in cooperation with PIOOM and the Berghof Research Center for Constructive Conflict Management).

European Centre for Conflict Prevention 1999 *People Building Peace: 35 Inspiring Stories from around the World*, Utrecht: European Centre for Conflict Prevention (in co-operation with the International Fellowship of Reconciliation (IFOR) and the Coexistence Initiative of State of the World Forum).

Featherstone, A. Betts 1991. "The Problem-Solving Workshop *in* Conflict Resolution," in Woodhouse, op. cit., 252–255.

Fetherston, A. Betts 2000. *From Conflict Resolution to Transformative Peacebuilding: Reflections from Croatia. Working Paper 4 (April)*, Bradford: University of Bradford.

Fetherston, A. Betts and A. C. Parkin 1997. "Transforming Violent Conflict: Contributions from Social Theory." *in* Broadhead, op. cit., 19–57.

Fisher, Roger and W. Ury 1981. *Getting to Yes: How to Negotiate Without Giving In*, London: Arrow Books.

Fisher, Ronald J. 1972. "Third Party Consultation: A Method for the Study and Resolution of Conflict," *Journal of Conflict Resolution* 16, 1, 67-94.

Fisher, Ronald J. 1983. "Third Party Consultation as a Method of Conflict Resolution: A Review of Studies,"*Journal of Conflict Resolution* 27, 2, 301–334.

Fisher, Ronald J. 1997a. *Interactive Conflict Resolution*, Syracuse, NY: Syracuse University Press.

Fisher, Ronald J. 1997b. "Interactive Conflict Resolution," *in* I.W. Zartman & J.L. Rasmussen (eds.), op. cit., 239-272.

Fisher, Ronald J. and Loraleigh Keashly 1991. "The Potential Complementarity of Mediation and Consultation within a Contingency Model of Third Party Intervention," *Journal of Peace Research* 28, 1, 29–42.

Folger, Joseph P. 1999. "Evaluating Evaluation in Ethnic Conflict Resolution: Themes from, and Commentary on, the Haverford-Bryn Mawr Conference," *in* Ross and Rothman, op. cit., 214.

Folger, Joseph P. and Tricia S. Jones 1994. *New Directions in Mediation: Communication Research and Perspectives*, London: Sage Publications.

Galtung, Johan 1996. *Peace By Peaceful Means: Peace and Conflict, Development and Civilization*, London: Sage Publications and Oslo: PRIO.

Gandhi, M.K. 1938. *Hind Swaraj, or Indian Home Rule*, Ahmedabad: Navajivan Publishing House.

Gandhi, M.K. 1950. *Satyagraha in South Africa*, Ahmedabad: Navajivan Publishing House.

Glasl, Friedrich 1982. "The process of Conflict Escalation and Roles of Third Parties," in Bomers and Peterson, op. cit., 119–140.

Hill, Barbara 1982. "An Analysis of Conflict Resolution Techniques: From Problem-Solving Workshops to Theory," *Journal of Conflict Resolution* 26, 1, 109–138.

Horkheimer, Max 1972. *Critical Theory*, New York: Seabury Press.

Jabri, Vivienne 1990. *Mediating Conflict: Decision-Making and Western Intervention in Namibia, Manchester*: Manchester University Press.

Jabri, Vivienne 1996. *Discourses on Violence: Conflict Analysis Reconsidered*, Manchester: Manchester University Press.

King, Martin Luther 1963. *Why We Can't Wait?*, New York: New American Library.

Kleiboer, Marieke 1996. "Understanding the Success and Failure of International Mediation," *Journal of Conflict Resolution* 40, 2, 360–389.

Kleiboer, Marieke 1998. *Multiple Realities of International Mediation*, Boulder, Co. and London: Rienner.

Lederach, John Paul 1995. *Preparing for Peace: Conflict Transformation Across Cultures*, New York: Syracuse University Press.

Lederach, John Paul 1997. *Building Peace. Sustainable Reconciliation in Divided Societies*, Washington, D.C.: United States Institute of Peace Press.

Lederach, John Paul 1999. "Justpeace: The Challenges of the 21st Century," *in* European Centre for Conflict Prevention 1999, op.cit.

Lewer, Nick 1999. *International Non-Governmental Organisations and Peacebuilding – Perspectives from Peace Studies and Conflict Resolution. Working Paper 3 (October)*, Bradford: University of Bradford.

Little, Richard 1984. "The Decision Maker and Social Order: The End of Ideology or the Pursuit of a Chimera?," *in* Banks, op. cit., 78–95.

McCarthy, Ronald M. and Gene Sharp 1997. *Nonviolent Action. A Research Guide*, New York and London:Garland Publishing, Inc.

Miall, Hugh 1992. *The Peacemakers: Peaceful Settlements of Disputes since 1945*, London: Macmillan.

Miall, Hugh, Oliver Rambotham, and Tom Woodhouse 1999. *Contemporary Conflict Resolution*, Cambridge: Polity Press.

Mitchell, Chris 1981. *The Structure of International Conflict*, London: Macmillan.

Mitchell, Chris 1991. "Recognising Conflict," *in* Woodhouse, op. cit.

Mitchell, Chris 1993. "Problem-solving Exercises and Theories," *in* Sandole and van der Merwe, op. cit., 83.

Moore, Christopher W. 1986. *The Mediation Process: Practical Strategies for Resolving Conflict*, San Francisco: Jossey-Bass.

Nicholson, Michael 1992. *Formal Theories in International Relations*, Cambridge: Cambridge University Press.

Prein, Hugo 1994. "A Contingency Approach for Conflict Intervention," *Group and Organisation Studies* 9, 1, 81–102.

Pressis, Rosemary du and Geoff Fougere (eds.) 1998. *Politics, Policy and Practice: Essays in Honour of Bill Willmott*, Christchurch, New Zealand: University of Canterbury.

Princen, Thomas 1992. *Intermediaries in International Conflict*, Princeton, NJ: Princeton University Press.

Reimann, Cordula 2001. "Engendering the Field of Conflict Management: Why Gender Does Not Matter! Thoughts from a Theoretical Perspective," *Peace Studies Papers*, Working Paper 2. Fourth Series, January, Bradford: University of Bradford.

Ropers, Norbert 1997. *Roles and Functions of Third Parties in the Constructive Management of*

Ethnopolitical Conflicts, Berlin: Berghof Research Center for Constructive Conflict Management.

Ropers, Norbert 1998. "Towards a Hippocratic Oath of Conflict Management? Eight Critical Statements Relating to the Contribution of NGOs in Conflict Prevention and Conflict Transformation," *in* European Platform for Conflict Prevention, op. cit., 27–33.

Ropers, Norbert and Tobias Debiel (eds.) 1995. *Friedliche Konfliktbearbeitung in der Staatenund Gesellschaftswelt*, Bonn: Stiftung Entwicklung und Frieden.

Ross, Marc Howard and Jay Rothman (eds.) 1999. *Theory and Practice in Ethnic Conflict Management Theorizing Success and Failure*, London: Macmillan Press.

Rubin, Jeffrey Z. 1980. "Experimental Research on Third-Party Intervention in Conflict," *Psychological Bulletin*, 87, 2, 379–391.

Rubin, Jeffrey Z., (ed.) 1981. *Dynamics of Third-Party Intervention: Kissinger in the Middle East*, New York: Praeger.

Rupensinghe, Kumar (ed.) 1995. *Conflict Transformation*, London: Macmillan.

Sandole, Dennis J.D. and Hugo van der Merwe (eds.) 1993. *Conflict Resolution Theory and Practice: Integration and Application*, Manchester and New York: Manchester University Press.

Scimecca, J. A. 1993 "Theory and Alternative Dispute Resolution. A Contradiction in Terms?" *in* Sandole and van der Merwe, op. cit., 211–221.

Schmid, Herman 1968. "Peace Research and Politics," Journal of Peace Research, 5, 3, 217–232.

Sharp, Gene 1973. *The Politics of Nonviolent Action*, Boston: Porter Sargent.

Simmel, Georg 1955. *Conflict and the Web of Group Affiliations*, New York: Free Press.

Stedman, Stephen J. 1991. *Peacemaking in Civil War: International Mediation in Zimbawe, 1974–1980*, Boulder, Co: Lynne Rienner.

Ury, William 1991. *Getting Past "No": Negotiating with Difficult People*, New York: Bantam Books.

Wall, J. and A. Lynn 1993. "Mediation: A Current Review," *Journal of Conflict Resolution* 37, 1, 160-194.

Weber, Max 1948. *The Theory of Social and Economic Organization*, Glencoe: The Free Press.

Webb, K, Koutrakou, V. N., and Walters, M. 1996. "The Yugoslavian Conflict, Europe Mediation and the Contingency Model: A Critical Perspective," *in* Bercovitch, op. cit., 171–189.

Weiss, Anja, 1999. "Rassistische Effekte unter antirassistisch engagierten MultiplikatorInnen. Zur interaktiven Reproduktion einer symbolisch vermittelten Dimension sozialer Ungleichheit."

Unpublished Doctorate Dissertation, Humboldt Universität zu Berlin.

Wolfe, Alvin W. and Yang Honggang (eds.) 1996. A*nthropological Contributions to Conflict Resolution*, London: University of Georgia Press.

Woodhouse, Tom (ed.) 1991. *Peacemaking in a Troubled World*, Oxford: Berg Books.

Zartman, I. William 1985. *Ripe for Resolution: Conflict and Intervention in Africa*, New York: Oxford University Press.

Zartman, I. William 1987. *Positive Sum: Improving North-South Negotiations*, New York: Transaction Publishers.

Zartman, I. William (ed.) 1995. *Elusive Peace: Negotiating an End to Civil Wars*, Washington, DC: The Brookings Institution.

Zartman, I. William et. al. 1996. "Negotiation as a Search for Peace," *International Negotiation* 1, 79-98.

Zartman, I. William and Maureen Berman 1982. *The Practical Negotiator*, New Haven: Yale University Press.

Zartman, I. William and J. Lewis Rasmussen (eds.) 1997. *Peacemaking in International Conflict. Methods and Techniques*, Washington, DC: United States Institute for Peace.